RE/MAX REALTRON BLUE FORCE
TEAM BLUE FORCE
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANCE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710

மலர்:- 30, 19 மே 2023 இதழ்:- 04

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600



## முள்ளிவாய்க்கால் முற்றத்தில் நினைவேந்தல்! உணர்வெழுச்சியுடன் திரண்ட தமிழர்கள்!





## கொழும்பில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கு குழப்பம் விளைவித்த சிங்கள ராவய அமைப்பு

## முள்ளிவாய்க்கால் கஞ்சி குடித்த பொலிசார் மீது விசாரணை!

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! மே மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance
100% Refund

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel: 905-201-9977 Fax: 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது
15 வருடங்களுக்கு மேலாக உங்களோடு நாங்கள்
24/7 365
AERO COURIER
Fast & Secure World Wide Service
416.292.0444
151 Nashdene Rd, Unit 01, Scarborough ON, M1V 4C4

BUY/SELL HOUSES
ARUL THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE TODAY REALTY LTD. BROKERAGE

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
MORTGAGE ALLIANCE

THINKING OF

# SELLING OR BUYING A HOME?



**Siva Kandiah**
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com

20 Years Real Estate Experience

**Team SIVA**
WILL BRING THE BEST RESULTS!

**Piravien Siva**
B.Comm. Sales Representative
**Dir: 647-221-5220**
piravien@gmail.com




**HomeLife Today Realty Ltd.,**
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply

HOMELIFE HIGHER STANDARDS

**Bus: 416.298.3200**
11 Progress Avenue, Suite 200, Toronto, ON. M1P 4S7
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT


• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY

**Markham & Eglinton**




**Scarborough** **$525,000**
Bedrooms: 3 Washrooms: 2
Big, Bright And Beautiful Condo

**Dundas/Hurontario St**




**Mississauga** **$639,000**
Bedrooms: 3 Washrooms: 2
Very Spacious Bright Condo

**King St. S & Queen St. S**




**Hamilton** **$699,900**
Bedrooms: 2 Washrooms: 2
Platinum Condos at DT Hamilton

**Bridge St W & Woolwich St**




**Kitchener** **$799,000**
Bedrooms: 3 Washrooms: 3
Freehold Townhouse End Unit

**Yonge St / Queens Quay**




**Toronto** **$978,000**
Bedrooms: 2 Washrooms: 2
Modern Living By The Lake!

**Queens Quay & Lower Sherbourne**



**Toronto** **$849,900**
Bedrooms: 2 Washrooms: 2
Waterfronts Luxury Corner unit

**Chinguacousy & William Pkwy**



**Brampton** **$1,075,900**
Bedrooms: 4 Washrooms: 3
End-Unit Townhouse, Corner Lot!

**River Street & Highway 12**



**Brock** **$1,350,000**
Bedrooms: 5 Washrooms: 4
Walkout Basement

**Meadowvale / 401**



**Scarborough** **$1,899,786**
Bedrooms: 4+3 Washrooms: 5
Open Concept Layout.

**Bur Oaks/Markham Rd**



**Markham** **$550,000**
Bedrooms: 1 Washrooms: 1
Newer Modern Condo Building

**Finch & Pharmacy**



**Scarborough** **$543,900**
Bedrooms: 2 Washrooms: 1
Large Open Concept Living & Dining

**Grey Highlands**




**Markdale** **$7,200,000**
Dollarama And Tim Hortons
Newly Built Tim Hortons Building

**Birchmount/Lawrence**



**Scarborough** **$639,000**
Bedrooms: 2 Washrooms: 2
Upgraded And Maintained Unit

**Mccowan & Ellesmere**

FOR LEASE



**Scarborough** **$3,200**
Bedrooms: 3 Washrooms: 1
Hardwood Floors Throughout

**Dixie Rd & Kingston Rd**

FOR LEASE



**Pickering** **$1,850**
Bedrooms: 1 Washrooms: 1
Beautiful Recently Renovated

**Victoria Park / Innismore**

FOR LEASE



**Scarborough** **$1,300**
Bedrooms: 1 Washrooms: 1
Great Location! Newly Renovated

**PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!**

**EELANADU**
**105 DINSDALE DR**
**WOODBRIDGE - ON**
**L4H 2M4 - CANADA**

**416 841 9600 / 905 653 3000**
**eelanadu1993@ gmail.com**

# 14 ஆண்டுகளாக நீதி வழங்காத இலங்கை! குற்றம் சாட்டுகின்றது மனித உரிமைகள் கண்காணிப்பகம்!

2009இல் முடிவடைந்த நாட்டின் கொடூரமான உள்நாட்டுப் போரின் இறுதிக் கட்டத்தில் இறந்தவர்களை நினைவுகூரும் மே 18 தொடர்பில், மனித உரிமைகள் கண்காணிப்பகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் தாக்குதலற்ற வலயங்கள் என்ற இடங்களை அறிவித்து பொதுமக்கள் அங்கு சென்ற பின்னர் தாக்குதல்களுக்கு உள்ளாக்கப்பட்டனர். அத்துடன் விடுதலைப் புலிகளின் தோல்விக்குப் பின்னர், அரசாங்கப் பாதுகாப்புப் படையினரிடம் பிடிபட்ட ஏராளமான போராளிகள் மற்றும் சிவிலியன் ஆதரவாளர்கள் என சந்தேகிக்கப்படுபவர்கள் சட்டத்திற்கு புறம்பாக கொல்லப்பட்டனர் அல்லது பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டனர் என்பதை மனித உரிமைகள் கண்காணிப்பகம் நினைவுட்டியுள்ளது.




இந்த நிலையில் போர் முடிவடைந்து பதினான்கு ஆண்டுகளுக்குப் பிறகும், நீதி வழங்கப்படவில்லை மாறாக இலங்கை அரசு தனது படைகள் செய்த அட்டூழியங்களை மறுத்து வருகிறது. காணாமல் போனவர்களின் தாய்மார்கள், தங்கள் அன்புக்குரியவர்களின் தலைவிதியை அறிய தொடர்ந்து முயன்று வரும் ஒரு குழுவினர், பாதுகாப்பு படையினரின் துன்புறுத்தலை எதிர்கொள்கின்றனர். காணாமற் போனோரைக் கண்டறிவதற்காக அமைக்கப்பட்ட காணாமற் போனோர் தொடர்பான அலுவலகம் எந்த முன்னேற்றமும் அடையவில்லை. மோதலின் போது, சித்திரவதை, சட்டத்திற்குப் புறம்பான கொலைகள், பொதுமக்கள் மீதான தாக்குதல்கள் மற்றும் சிறுவர் படையினரைப் பயன்படுத்துதல் உள்ளிட்ட எண்ணற்ற உரிமை மீறல்களை இரு தரப்பினரும் மேற்கொண்டனர்.

26 ஆண்டுகால உள்நாட்டுப் போரின் போதும் அதற்குப் பின்னரும் நடந்த பாரதூரமான உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்களுக்குப் பொறுப்பானவர்களைத் தீவிரமாக விசாரித்து உரிய முறையில் தண்டிக்கத் தவறிவிட்டதாக ஐக்கிய நாடுகளின் அமைப்புக்கள், மனித உரிமைகள் கண்காணிப்பு மற்றும் பிற மனித உரிமை அமைப்புகள் நீண்டகாலமாக இலங்கை நிர்வாகங்களை விமர்சித்து வருகின்றன.

குற்றச் செயல்களில் ஈடுபட்டதாகக் கூறப்படும் சில அரசாங்க அதிகாரிகள் அரசியல் ரீதியாக பலம் வாய்ந்தவர்களாக அல்லது இலங்கை இராணுவத்தில் உயர் பதவிகளை வகிக்கின்றனர். தமிழர்களுக்குச் சொந்தமான அல்லது இந்துக் கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களை அதிகாரிகள் கைப்பற்றுவது அல்லது வைத்திருப்பது தொடர்கிறது. போர்க் குற்றங்கள் தொடர்பில் உள்நாட்டு விசாரணையை தொடர அரசாங்கம் விரும்பாததால், பாதிக்கப்பட்டவர்களும் அவர்களது குடும்பத்தினரும் வேறு இடங்களில் நீதியைப் பெற வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்.

இலங்கை மற்றும் வெளிநாட்டு நீதித்துறை அதிகாரிகளின் கலப்பின செயல்முறையை திட்டமிடும் முந்தைய ஒப்பந்தத்தில் இருந்து அரசாங்கம் விலகிய பின்னர், எதிர்கால வழக்குகளில் பயன்படுத்துவதற்கான ஆதாரங்களை சேகரிக்க ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை, ஒரு பொறுப்புக்கூறல் திட்டத்தை நிறுவியது.

இந்த நிலையில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவை உருவாக்குவதற்கு முன்மொழிந்தார். ஆனால் முந்தைய அனைத்து உள்நாட்டு ஆணைக்குழுக்களின் பரிந்துரைகளும் புறக்கணிக்கப்பட்டுள்ளன. இது நீதிக்கான முயற்சிகளை ஊக்குவிப்பதை விட ஓரங்கட்டுவதற்கான ஒரு வழியாகும் என்றும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் குறிப்பிட்டுள்ளது.

எனவே இலங்கை அரசாங்கம் முட்டுக்கட்டை போடுவதை நிறுத்தி விட்டு, பலர் பாதிக்கப்படும் பாரதூரமான மீறல்களை விசாரித்து வழக்குத் தொடர வேண்டிய கடமையை நிறைவேற்ற வேண்டும். அது வரை, இலங்கையில் வெளிநாடுகளில் நீதியை தீவிரமாக தொடர ஐக்கிய நாடுகளின் பொறுப்புக்கூறல் திட்டத்துடன் ஏனைய நாடுகள் இணைந்து செயற்படவேண்டும் என்றும் மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தெற்காசிய பணிப்பாளர் மீனாட்ஷி கங்குலி கோரியுள்ளார்.

## வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கியமான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்புவோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலைபேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்டவர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகையிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப்பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடையாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**


## முகாமையாளர் தேவை

மிசிசாகாவில் உள்ள இந்து ஆலயம் ஒன்றில் முழநேரமாகவோ அல்லது பகுதி நேரமாகவோ பணி புரிய இந்து சைவ நெறிகள் பற்றிய ஈடுபாடுடையவராகவும் கணனி சம்பந்தமான பொது அறிவுடையவருமான ஒருவர் உடனடியாகத் தேவை. தகமைக் கேற்ப சம்பளம் வழங்கப்படும்.

**தொடர்புகளுக்கு Hmmdhurga@gmail.com**

**தொலைபேசி 905 612 1856**


## மிசிசாகா இந்து மகாசபையின் வருடாந்தப் பொதுக்கூட்டம்

மிசிசாகா இந்து மகாசபையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் 04 யூன் 2023 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு 1808 Drew Road மிசிசாகாவில் அமைந்துள்ள ஜெய துர்க்கா ஆலய மண்டபத்தில் இடம்பெறும். உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு வேண்டப்படுகிறீர்கள்.

– ஆலய நிர்வாகம்


**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**

குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்



**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**

# ரணில் - தமிழ்க்கட்சிகள் பேச்சுவார்த்தையில் இந்தியாவின் முகவர்களாக 2 விக்கிகள்!

இலங்கையின் இனப்பிரச்சினை தீர்வுக்கான அதிகாரப் பகிர்வு தொடர்பாக 15 மே 2023 சிறிலங்காவின் அதிபர் ரணில் விக்ரமசிங்கவுக்கும் தமிழ் கட்சிகளுக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுக்களின் போது இந்திய - இலங்கை ஒப்பந்த காலத்தில் இந்தியப் பெரியண்ணரால் தலைப்பாகை கட்டப்பட்டிருந்த சில முகங்களின் திட்டங்கள் தலையெடுத்திருப்பதாகத் தெரிகிறது.

அந்த வகையில், 1987 இந்தோ - சிறிலங்கா ஒப்பந்தத்திற்கு பின்னர் உருவாக்கப்பட்ட ஒன்றுபட்ட வடக்கு கிழக்கு மாகாண சபையின் முதல்வராக இருந்து, பின்னர் இந்தியப் படையினரின் வெளியேற்றத்துடன் இலங்கையை விட்டு வெளியேறி இந்தியாவில் அஞ்ஞாதவாசம் செய்த வரதராஜப்பெருமாளின் செயலாளர் விக்னேஸ்வரனால் தயாரிக்கப்பட்ட இடைக்கால சபை என்ற விடயம் முன்னாகத்தப்பட தலைப்பட்டிருந்தது.

இந்த விடயத்தை பேச்சுக்களின் போது சிறிலங்காவின் அதிபர் ரணில் விக்ரமசிங்க பகிரங்கப்படுத்தியதுடன், வடக்கு கிழக்கு மாகாண சபைகளுக்குரிய இந்த இடைக்கால சபையை ஆறு மாத காலத்திற்கு நடைமுறைப்படுத்திக் கொள்ளும் யோசனை ஒன்று தனக்கு கடந்த எட்டாம் திகதி கிட்டியதாகவும், இந்த யோசனைக்கு இன்னொரு முன்னாள் முதல்வரும் தமிழ் தேசியக் கூட்டணியின் தலைவருமான சி.வி.விக்னேஸ்வரனும் இணக்கம் தெரிவித்ததாகவும் குறிப்பிட்டிருந்தார்.

ஆக மொத்தம் இரண்டு விக்கிகள் எனப்படும் விக்னேஸ்வரன்களும் விரும்பிக் கொள்ளும் இந்தத் திட்டத்தின் பின்னால் இந்தியப் பெரியண்ணர் இருப்பதான ஊகங்கள் பலமாகவே உலா வருகின்றன.

ரணில் விக்ரமசிங்கவைப் பொறுத்தவரை



அவரும் இந்த இடைக்கால சபை என்ற விடயத்தை இடைச்செருகல் செய்து காலத்தை இழுத்தடிக்க விரும்புவது தெரிகிறது. இதனால் தான் இந்தத் திட்டத்தை 6 மாத காலத்திற்கு வடக்கு கிழக்கிற்கு நடைமுறைப்படுத்திக் கொள்வோமா என்ற ஒரு வினாவை நேற்று இடம்பெற்ற பேச்சுக்களின் போது தொடுத்திருந்தார். ரணில் இவ்வாறு இந்தக் கேள்வியை தொடுக்க நேற்றைய அமர்வில் பங்கெடுத்த முன்னாள் முதல்வர் சி.வி. விக்னேஸ்வரனும் இந்த இடைக்கால சபைத் திட்டத்தில் உள்ள விடயங்களை விரிவாக வாசிக்க ஆரம்பித்திருக்கிறார். இந்த நிலையில் தான் இந்த இடைக்கால சபை என்ற சூட்சுமத்தின் பின்னணியில் உள்ள விடயங்களில் சற்று உசாரடைந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான தமிழரசுக் கட்சி, ரெலோ, புளொட் ஆகியன தமக்கிடையே வேற்றுமைகள் இருந்த போதும் அந்த வேற்றுமையில் ஒற்றுமை கண்டு இந்த யோசனையை உடனடியாகவே நிராகரித்தனர்.



இலங்கைத் தீவில் மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதை தவிர்க்கவும், அதே சமகாலத்தில் வடக்கு கிழக்குக்குரிய இந்தப் புதிய திட்டத்தால் தமிழர்களை சமாளித்துக் கொள்ளவும் தனக்குரிய கால அவகாசத்தை இழுத்தடித்து இறுதியில் நாடாளுமன்றம் அனுமதிக்கவில்லை. இதனால் தமிழர்களுக்கு தன்னால் அரசியல் தீர்வை வழங்கிக் கொள்ள முடியவில்லை என்ற கருத்தியலை உருவாக்கும் வகையிலும் ரணில் நகரத் தலைப்படுகின்றார்.

இரட்டை இலக்குகளுடன் காலத்தை இழுத்தடிக்க ரணில் இந்த முறையைப் பிடிக்க முயன்றாலும், இதற்கு பிடி கொடுக்க தமிழரசுக் கட்சி, ரெலோ, புளொட் ஆகியன தயாராக இல்லை என்பது நேற்றைய பேச்சுக்களின் போது பகிரங்கப்படுத்தப்பட்டது.

ஆயினும் இதே சமகாலத்தில், மாகாண சபைத் தேர்தலை நடத்திக் கொள்வது என்ற விடயத்தில் தமிழ் தேசியக் கட்சிகளுக்கும் இந்தியப் பெரியண்ணருக்கும் பிடி கொடுக்க ரணிலும் தயாராக இல்லை என்பதும் தெரிகின்றது.


## வடமாகாண ஆளுநராக மீண்டும் சார்ள்ஸ்

வடக்கு கிழக்கு மற்றும் வடமேல் மாகாணங்களின் ஆளுநர்கள் ஜனாதிபதியினால் அப்பதவிகளில் இருந்து நீக்கப்பட்ட நிலையில் வட மாகாண ஆளுநராக பி.எம்.எஸ். சார்ள்ஸ், கிழக்கு மாகாண ஆளுநராக செந்தில் தொண்டமான் மற்றும் வட மேல் மாகாண ஆளுநராக லக்ஷ்மன் யாப்பா ஆகியோர் 17 மே 2023 புதன்கிழமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்துகொண்டனர்.

வடக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்ட பி.எஸ்.எம் சார்ள்ஸ், அரச நிர்வாக சேவையில் தேர்ச்சி பெற்ற அதிகாரி, அரச அதிபர், வடக்கு மாகாண ஆளுநர், சுங்க திணைக்கள



பணிப்பாளர், தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர் என முக்கிய பதவிகளை வகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

றொரன்ரோ அல்பியன் பகுதியில் கோவில் கொண்டிருக்கும்

கனடா – அருள்மிகு


ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

1771 Albion Rd., Unit #1, Toronto, ON M9W 5S7 (Albion & Hwy 27)

Tel: 416.213.0110 • www.shrimuththumaari.cin

ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 9.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 9.00 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்



அம்பாள் அடியார்களே!

01 யூன் 2023 வியாழக்கிழமை
பிரதோஷ விரதம்

02 யூன் 2023 வெள்ளிக்கிழமை
வைகாசி விசாகம்

இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்

# முள்ளிவாய்க்கால் கஞ்சி குடித்த பொலிசார் மீது விசாரணை!



யாழ்ப்பாண பல்கலைகழக மாணவர்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு கடந்த 10.05.2023 அன்று கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் ஏற்பாடு செய்யப்பட்டு வழங்கப்பட்டது. இதன் போது ஏ-9 பிரதான வீதியில் பயணிப்பவர்களுக்கு ஏற்பாட்டாளர்களால் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கி வைக்கப்பட்டது.

இச் சந்தர்ப்பத்தில் வீதியில் பயணித்த கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த வீதி போக்குவரத்து பொலிஸாரும் பல்கலைக்கழக மாணவர்கள் வழங்கிய முள்ளிவாய்க்கால் கஞ்சியினை சிரட்டையில் பெற்று குடித்தனர்.

வீதி போக்கு வரத்து பொலிஸார் முள்ளிவாய்க்கால் கஞ்சி குடிக்கும் புகைப்படங்கள் ஊடகங்களில் வெளி வந்தன. பின்னர் அவை சிங்கள ஊடகங்களிலும் வெளி வந்தன.

இதனை தொடர்ந்தே குறித்த இரண்டு பொலிஸார் மீதும் விசாரணையை மேற்கொள்ளுமாறு கொழும்பிலிருந்து தகவல் வழங்கப்பட்டு அவர்களுக்கு உள்ளக விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2009 இறுதி யுத்தத்தின் போது உணவின்றி தவித்த மக்களுக்கு அப்போது அவர்களின் உயிர்களை பாதுகாக்க கஞ்சி வழங்கப்பட்டது. இதனை நினைவு கூரும் வகையில் வருடந்தோறும் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# திருமலையில் முப்படையினரையும் மீறி நுழைத்த தேரர்கள்!



திருகோணமலை நெல்சன் திரையரங்குக்கு முன்னால் தொல்லியல் திணைக்களத்தினால் அடையாளப்படுத்தப்பட்ட இடத்தில் தாய்லாந்தில் இருந்து வருகை தரும் பௌத்த தேரர்களின் உபசம்பதா நிகழ்வுக்காக பிரித் ஓதும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில், இந்த நிகழ்வானது இன நல்லிணக்கத்தை சீர்குலைத்து விடும் என்ற காரணத்தினால் இச்சமய நிகழ்வுகளுக்காக தெரிவு செய்யப்பட்டிருந்த இடத்தில் நிகழ்வுகளை நடத்த குறித்த மாவட்ட அரசாங்க அதிபரினால் தடை விதிக்கப்பட்டிருந்தது.

இதனால், கடந்த 14 மே 2023 ஞாயிற்றுக்கிழமை இத்தடைக்கு எதிர்ப்பு தெரிவித்து சில பௌத்த தேரர்களும் சிங்கள மக்களும் திருகோணமலை, மணிக்கூட்டு கோபுரத்தில் இருந்து சமய நிகழ்வினை அனுஷ்டித்தவாறு தடைவிதிக்கப்பட்ட பகுதிக்குள் முப்படையினரின் பாதுகாப்பையும் மீறி வலுக்கட்டாயமாக நுழைந்து, தமது சமய நிகழ்வுகளை தொடர்ந்து முன்னெடுத்திருந்தனர்.

# சிங்கள மக்கள் இல்லாத இடத்தில் விகாரைகள் ஏன்?

## நயினாதீவு நாகவிகாராதிபதி நவதகல பதுமகீர்த்தி தேரர்

தென்னிலங்கையில் இருக்கிற விகாரைகள் பராமரிக்கப்படாமல் உள்ள நிலையில் வடக்கு கிழக்கில் எதற்காக விகாரைகள்.

பௌத்த, சிங்கள மக்கள் இல்லாத இடத்தில், ஏன் இத்தனை விகாரைகள். இவ்வாறு, யாழ். நயினாதீவு பௌத்த மதகுரு நவதகல பதுமகீர்த்தி திசாநாயக்க தேரர் கொந்தளித்துள்ளார்.

வடக்கில் புதிதாக நிர்மாணிக்கப்படும் பௌத்த விகாரைகள் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார். மேலும் அவர்,

இராணுவம் எதற்காக புத்த விகாரைகளை அமைப்பதில் மும்முரமாக நிற்கிறது. இராணுவத்தினர் அவர்களின் வேலையை பார்க்க வேண்டும்.



ஆலயம் அமைப்பது, பராமரிப்பது இராணுவத்தின் வேலையல்ல, அது மதகுருமாரின் வேலைகள். அத்துடன் நெடுந்தீவு மற்றும் மாதகலில் இவ்வாறு விகாரைகளை அமைக்க வேண்டும் என என்னிடம் வந்தார்கள். நான் அவர்களை விரட்டி விட்டேன்.

நான் சிங்களவன் தான், ஆனால் எப்போதும் நியாயத்துடன் நடந்து கொள்வேன், எவராக இருந்தாலும் நேர்மை இருக்க வேண்டும் என யாழ். நயினாதீவு பௌத்த மதகுரு கடுமையாக சாடியுள்ளார்.

அவர் தெரிவித்த குறித்த விடயங்களானது தமிழ் மக்கள் மத்தியில் பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

# தொல்பொருள் திணைக்களத்தை இயக்குபவர்கள்?

தொல்பொருள் திணைக்களத்துக்கு பிக்குகளிடமிருந்து பணம் வருவதாக அதன் அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர். ஜனாபதியுடனான சந்திப்பின் போதே இந்தத் தகவல் வெளியிடப்பட்டிருக்கின்றது.

இதன் மூலம் தொல்பொருள் திணைக்களம் அரசின் அங்கமாக இருந்தபோதிலும்கூட அதனை அரசாங்கத்துக்கு வெளியில் இருப்பவர்களே இயக்கிவரும் உண்மை தற்போது அம்பலமாகியிருக்கின்றது. இதனை வெளிக்கொண்டு வந்தமைக்காக ரணிலுக்கு நன்றி சொல்லலாம். ஆனால், ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக் காலத்திலும் கூட தொல்பொருள் திணைக்களம் அதன் செயல்பாடுகளை நிறுத்தியிருக்கவில்லை.

தற்போது பௌத்த மயமாக்கல் குறிப்பாக, இந்து ஆலயங்களை இலக்கு வைத்து இடம்பெறும் நகர்வுகள் அனைத்துமே பௌத்த பிக்குகளின் திட்டமிட்ட செயல்பாடுகள் என்பது தெளிவாகியிருக்கின்றது. இலங்கைத் தீவில் அரசியல் கட்சிகள், அரச அதிகாரிகளுக்கு அப்பால் இரகசிய அதிகார கட்டமைப்பு ஒன்று இயங்கி வருகின்றது. அது அரசின் அதிகார எல்லைக்கு வெளியிலிருந்து அரசாங்கத்தையும் அரச கட்டமைப்புக்களை யும் திரை மறைவில் இயக்கிவருகின்றது.

தமிழ்த் தேசிய அரசியல் எழுச்சியுற்ற காலத்திலிருந்து தமிழரின் தனித்துவமான அரசியல் இருப்பை பலவீனப்படுத்துவதில் பௌத்த மதக் கட்டமைப்பும் சிங்கள அரசியலும் பின்னிப்பிணைந்தே இயங்கிவருகின்றன. இப்போது ரணில் விக்கிரமசிங்க தொல்பொருள் திணைக்களத்தை எச்சரித்தாலும் கூட ஒரு கட்டத்துக்கு மேல் பௌத்த- சிங்கள கட்டமைப்புகளை புறம்தள்ளிச் செயலாற்றக்கூடிய வல்லமையுள்ள அரசியல் தலைவர்களை இன்னும் தென்னிலங்கை காணவில்லை.

தமிழ் மக்கள் ஜனாதிபதி தேர்தல்களின் போது, ஒருவரை விடவும் மற்றவர் நல்லவர் என்னும் அடிப்படையில் நபர்களை தெரிவு செய்தாலும்கூட, எவரும் சிங்கள பௌத்த கட்டமைப்புகளின் பிரத்தியேக வேலைத் திட்டங்களை கேள்விக்கு உள்ளாக்கக்கூடிய தகுதி நிலையில் இருந்ததில்லை.

ஒப்பீட்டு அடிப்படையில் ரணில் விக்கிரமசிங்க சில விடயங்களை வெளிப்படையாகப் பேசினாலும் கூட, அவராலும் பௌத்த சிங்கள கட்டமைப்புகளின் இரகசிய நகர்வுகளை ஒரு கட்டத்துக்கு மேல் கட்டுப்படுத்த முடியாது.

இந்த நிலையில், தமிழ் மக்களுக்கு முன்னாலுள்ள தெரிவு என்ன? முதலில் வடக்கு கிழக்கில் தமிழர்கள் அதிகாரத்தை முடிந்தவரையில் கையாளக் கூடிய நிலையிலிருக்க வேண்டும்.

தற்போதைய சூழலில், மாகாண சபை முறைமை ஒன்று தான் தமிழர்கள் அதிகாரத்தை கையாள்வதற்குள்ள ஒரேயொரு வாய்ப்பாகும். இதனை மறுதலிக்கும் ஒரு குழுவினர் இருக்கலாம் ஆனால், அவர்களால் தாங்கள் கூறும் விடயத்தில் இதுவரையில் சிறியளவில்கூட முன்னேற்றத்தைக் காண்பிக்க முடியவில்லை. அவர்கள் அடிப்படையில் தோல்வியடைந்த தரப்பினராவர்.

தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில், ஆரம்பத்திலிருந்தே யதார்த்தமாக பேசி வருபவர்களின் வாதமே நடைமுறையில் வெற்றி பெற்றிருக்கின்றது. அந்த வகையில், மக்களின் நலனை கருத்தில் கொண்டு யதார்த்தபூர்வமாக சிந்திப்பவர்கள் அனைவருமே மாகாண சபை முறைமையை பயன்படுத்துவதிலுள்ள சாதகமான அம்சங்களை புரிந்து கொண்டிருக்கின்றனர். மக்களும் யதார்த்தத்தை உணர்ந்திருக்கின்றனர்.

இந்தப் பின்புலத்தில் பௌத்த சிங்கள ஆக்கிரமிப்பு நகர்வுகளை முடிந்தவரையில் தடுக்க வேண்டுமாயின், மாகாண சபை முறைமை இயங்கு நிலையில் இருக்க வேண்டும். அதனை பயன்படுத்திக் கொண்டு தான் விடயங்களை தமிழர்களால் கையாள முடியும். 13ஆவது திருத்தச் சட்டத்தில், வடக்கு கிழக்கின் தொல்பொருள் அடையாளங்களை கையாள்வதற்கான ஏற்பாடுகளும் இருக்கின்றன. ஆனால், அதனை தமிழ் அரசியல் தரப்பினர் முறையாகக் கையாளவில்லை. விக்னேஸ்வரன் முதலமைச்சராக இருந்த போது, இது தொடர்பான விடயங்களை கையாள்வதற்கான ஏற்பாடுகளை செய்திருக்கமுடி யும். ஆனால், கட்சி சண்டைகளிலேயே மாகாண சபை நிர்வாகத்தை மூழ்கடித்தமையால், சாதகமான விடயங்களை கையாளவில்லை. சிங்கள பௌத்த கட்டமைப்பை ஒருபோதுமே வெறுமையிலிருந்து எதிர்கொள்ள முடியாது.

# அதிகாரப் பரவலாக்கம் குறித்து பேச்சில் இணக்கமில்லை! பேச்சுவார்த்தையில் குளறுபடிகள் செய்த விக்கினேஸ்வரன்!

தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்த பேச்சுவார்த்தைகளின் நீட்சியாக அதிகாரப்பரவலாக்கம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தரப்புக்கும் வட, கிழக்கு மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் 15 மே 2023 திங்கட்கிழமை நடைபெற்ற இரண்டாம் நாள் பேச்சுவார்த்தை இணக்கமின்றி முடிவுக்கு வந்தது.



இப்பேச்சுவார்த்தையின் போது மாகாண சபைகளைத் தற்காலிகமாக நிர்வகிக்கும் வகையிலான இடைக்கால நிர்வாக முறைமை தொடர்பில் தமிழ் மக்கள் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்கினேஸ்வரனால் யோசனையொன்று முன் வைக்கப்பட்ட போதிலும், அதற்கு எதிர்ப்பை வெளியிட்ட தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு புதிய அரசியலமைப்பை உருவாக்கும் அதேவேளை, மாகாணசபைத் தேர்தல்களை உடனடியாக நடத்தவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது.

நல்லிணக்கம் மற்றும் அதிகாரப்பகிர்வு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் மக்கள் பிரதிநிதிகளுக்கும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அரசாங்கத்துக்கும் இடையிலான தொடர் பேச்சுவார்த்தையின் இரண்டாம் நாள் சந்திப்பு திங்கட்கிழமை நடைபெற்றது.

ஜனாதிபதி செயலகத்தில் திங்கட்கிழமை மாலை 5.40 மணிக்கு ஆரம்பமாகி இரவு 7.00 மணி வரை நடைபெற்ற இப்பேச்சுவார்த்தையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையிலான ஆளும் தரப்பில் அமைச்சர்களான விஜயதாஸ ராஜபக்ஷ, நஸீர் அஹமட், பிரசன்ன ரணதுங்க இராஜாங்க அமைச்சர்களான எஸ்.வியாழேந்திரன், சிவநேசதுரை சந்திரகாந்தன், பாராளுமன்ற உறுப்பினர் திலீபன் ஆகியோரும் ஜனாதிபதியின் செயலாளர் மற்றும் ஆலோசகர் உள்ளிட்ட அரச அதிகாரிகளும் பங்கேற்றிருந்தனர்.

அதேபோன்று வட, கிழக்கு மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்த்தரப்பில் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் சிரேஷ்ட தலைவர் இரா.சம்பந்தன் எம்.பி, பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் எம்.பி மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான சிறிதரன், சாள்ஸ் நிர்மலநாதன், கலையரசன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். ஜனநாயக தமிழ்த்தேசியக் கூட்டணியின் சார்பில் பங்காளிக்கட்சிகளின் பாராளுமன்ற பிரதிநிதிகளான ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி, செயலாளர் நாயகம் கோவிந்தன் கருணாகரம் எம்.பி ஆகியோரும் புளொட் தலைவர் சித்தார்த்தன் எம்.பியும் பங்கேற்றிருந்தனர்.

மேலும் தமிழ் மக்கள் கூட்டணியின் பொதுச்செயலாளரும் யாழ்மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி. விக்கினேஸ்வரனும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் யாழ்மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனும் ஜனாதிபதியுடனான இச் சந்திப்பில் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது அரசாங்கத்தரப்பின் சில தமிழ்ப்பிரதிநிதிகள் மற்றும் சிவில் சமூகப்பிரதிநிதிகளின் கையெழுத்துடனான ஓர் ஆவணத்தை தமிழ் மக்கள் கூட்டணியின் பொதுச்செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி. விக்கினேஸ்வரன் முன்மொழிந்துள்ளார்.

அதில் மாகாணசபை முறைமையில் நிலவும் நிர்வாகச்சிக்கல்களைத் தீர்த்தல் மற்றும் இடைக்கால நிர்வாக முறைமையொன்றை உருவாக்கல் பற்றிய விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அந்த ஆவணம் தொடர்பில் ஜனாதிபதி நேர்மறையான பிரதிபலிப்பை வெளிக்காட்டிய போதிலும், தமிழ்த் தேசியக்கூட்டமைப்பினர் அதனை முழுமையாக எதிர்த்துள்ளனர். அதுமாத்திரமன்றி அந்த ஆவணம் தொடர்பில் கலந்துரையாடும் நோக்கில் தெரிவுக் குழு.வொன்றை அமைக்கும் ஜனாதிபதியின் யோசனையையும் நிராகரித்த கூட்டமைப்பினர், அக்குழுவில் தாம் அங்கம்வகிக்கப்போவதில்லை என்றும் அறிவித்துள்ளனர்.

இதுகுறித்து சி.வி.விக்கினேஸ்வரன் எம்.பி கூறுகையில், ஜனாதிபதியுடனான சந்திப்பின்போது நான் மாகாணசபைகளுக்கான இடைக்கால நிர்வாக முறைமை, மாகாணசபைத் தேர்தல் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ளல் என்பன தொடர்பில் ஆவணமொன்றைத் தயாரித்து வாசித்தேன். இடைக்கால நிர்வாக முறைமை என்பது சட்டத்துக்கு முரணானதொன்றல்ல. மாறாக சட்டத்தில் உள்ள விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்கு ஏதுவானதொரு கட்டமைப்பேயாகும்.

இருப்பினும் இதுபற்றிக் கருத்து வெளியிட்ட சுமந்திரன், புதிய அரசியலமைப்பை உருவாக்க வேண்டும் என்றும் மாகாணசபைத்தேர்தல்களை நடாத்தி முழுமையான அதிகாரங்களை வழங்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார். ஆனால் புதிய அரசியலமைப்பைத் தயாரிப்பதற்குக் காலம் எடுக்கும் என்பதாலும், மாகாணசபைத் தேர்தல்களை நடத்துவதற்கு முன்னதாகப் பல்வேறு செயன்முறைகளைக் கடக்க வேண்டியிருப்பதாலும் ஜனாதிபதி எனது யோசனையை ஏற்றுக் கொண்டார். இது பற்றிக் கலந்துரையாடுவதற்காகக் குழுவொன்றை நியமிப்பதாகவும் அவர் கூறியிருக்கின்றார் என்றார்.

(8ம்பக்கம் பார்க்க)

தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்

Math & Physics Tutoring

(For High School Students)



Special Classes for IB, AP & University Students
Math: Grade 9-12, Advanced Functions,
Calculus & Vectors and Data Management.
Physics: Grade 11 & 12

கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)

சி.இளஞ்செழியன்

Tel: 416-524-0424

# நாகபூஷணி அம்மன் சிலை விவகாரம்:- யாழ்.நீதிமன்றம் பிறப்பித்துள்ள உத்தரவு!



யாழ்ப்பாணம் பண்ணை சுற்றுவட்டப் பகுதியில் வைக்கப்பட்ட நாகபூசணி அம்மன் சிலையை அகற்று மாறு கோரி காவல்துறையினர் தாக்கல் செய்த வழக்கை யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. 15 மே 2023 அன்று யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப் பட்ட போது குறித்த வழக்கை தொடர காவல்துறை யினருக்கு அதிகாரம் இல்லை என நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது.

குறித்த வழக்கு தொடர்பில் காவல்துறையினரின் வழக் கிடு தகைமை மற்றும் நீதிமன்றத்தின் நியாயாதிக்கம் தொடர்பில் கேள்விக்குட்படுத்தி இந்து அமைப்புக்கள் சார்பில் சட்டத்தரணி என்.சிறிகாந்தா, இந்து அமைப்பு க்கள் சார்பில் அகில இலங்கை இந்து மாமன்றம், நல்லூர் ஆதினம் சார்பில் சட்டத்தரணி எம்.ஏ.சுமந் திரன் உட்பட பல சட்டத்தரணிகளும் முன்னிலையாகி கடந்த ஏப்ரல் 18ஆம் திகதி வழக்கு விசாரணையின் போது நீண்ட சமர்ப்பணங்களை முன்வைத்திருந்த னர்.இந்த நிலையில் குறித்த விடயங்களை ஆராய்ந்த நீதிமன்றம் குறித்த வழக்கை தள்ளுபடி செய்தது.

# புகழ்பூத்த மருத்துவர் சிவகுமாரன் மறைவு!



புகழ்பூத்த மருத்துவ நிபுணர் சபாரட்ணம் சிவ குமாரன் 14 மே 23 கொழும்பில் காலமானார் அர்ப் பணிப்பு மிக்க சேவையாளரான யாழ் இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் அமரர் ே.சபாரட்ணம் அவர்களின் புத்திரன் என்பது குறிப்பிடத்தக்கது.

யுத்தகாலத்தில் யாழ்ப்பாண வைத்தியசாலையில் தங்கி மக்களுக்கு அளப்பரிய சேவையைச் செய்து மக்களின் பாராட்டைப் பெற்றவர். தியாக தீபம் லெப். கேணல் திலிபன் நீராகாரம் கூட அருந்தாமல் உண்ணாதிருந்து போராடிய வேளை அவரது உடல் நிலையை அருகிரு ந்து ஆய்வு செய்து குறிப்பெடுத்துப் பதிவு செய்து ஈற்றில் 12ஆம் நாள் தியாகதீபம் திலீப னின் ஈகைச்சாவை உறுதி செய்தவர் மருத்து வர் சபாரட்ணம் சிவகுமாரன் அவர்கள்

தொடர்ச்சியாக திலீபன் அண்ணாவின் உடல் நிலையைப் பரிசோதித்து வந்தவர் 26-09-1987 அன்று காலை 10:48 மணியளவில் பரிசோதிக் கிறார். அந்த தியாக தீபம் அணைந்து விட்ட செய்தியை வாயால் சொல்ல முடியாதல் அப் படியே திலீபனின் பாதங்களில் வீழ்ந்து வணங்கு கிறார்.

கூடியிருந்த மக்கள் திரள் அவரின் குறிப்பை புரிந்து ஓ என விண்ணதிர கதறி அழத் தொட ங்குகிறது. இந்த வரலாற்றுக் காட்சி பலரது நெஞ்சை விட்டு அகலாது. அந்த புள்ளியில் விடுதலை வரலாற்றில் தன் பங்காற்றிய சபாரட் ணம் சிவகுமாரன் புகழ் என்றும் நிலைத்திரு க்கும். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஈழ நாடு வாசகர்கள் சார்பில் ஆண்டவனைப் பிரார்த் திக்கின்றோம்.

# சிவலிங்கம் ஆரூரன் விடுதலை!

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பாது காப்புச் செயலாளராக 2006 ஆம் ஆண்டு பித்தல சந்தி பகுதியில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்கு தல் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப் பட்ட சிவலிங்கம் ஆரூரன் அனைத்து குற்றச்சாட்டு க்களில் இருந்தும் விடுவிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க இந்தத் தீர்ப்பினை வழங்கியுள்ளார். 2009 ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக் கப்பட்டு, புதிய மெகசின் சிறையில் அடைக்கப்பட்டார்.

இது தொடர்பான வழக்கு கொழும்பு மேல் நீதி மன்றத்தில் 15 மே 2023 திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, நீதிமன்றம் அவரை விடுதலை செய்தது.

கொலைக்கு சதி செய்ததாக 13 குற்றச்சாட்டுகளின் கீழ் சட்டமா அதிபர் இந்த வழக்கை தாக்கல் செய்திருந் ததுடன், பிரதிவாதிக்கு எதிராக 6 குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

43 வயதான ஆரூரன், 2004 ஆம் ஆண்டு மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் பொறியியல் பட்டம் பெற்று, பேராதனைப் பல்கலைக்கழகத்தில் முதுகலைப் பட்டப் படிப்பைக் கற்கும் போது கைது செய்யப்பட்டார்.



சிறைவாசத்துக்குப் பிறகு தனது எழுத்துத் திறனை வளர்த்துக் கொண்ட ஆரூரன், தமிழில் 7 படைப்பு களையும் ஆங்கிலத்தில் ஒரு படைப்பையும் எழுதியுள் ளார்.இந்நிலையில், சிவலிங்கம் ஆரூரன் எழுதிய ´ஆதுரசாலை´ என்ற தமிழ் நாவலுக்கு 65 ஆவது அரச இலக்கிய விருது வழங்கும் விழாவில் சிறந்த நாவலுக்கான விருது வழங்கப்பட்டது.

# புலிகளின் காலத்தில் பேணப்பட்ட பௌத்த சின்னங்கள்



தமிழ் ஈழ விடுதலைப்புலிகள் காலத்திலும் பௌத்த சின்னங்கள் பேணப்பட்டன என்று சிவகுரு ஆதின முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள் தெரிவித்து ள்ளார். இது தொடர்பில் மேலும் கூறுகையில் வடக்கு கிழக்கில் இப்போது ஆக்கிரமிப்பு செய்யப்படும் பகுதி களில் பௌத்தர்கள் இல்லை.

இலங்கை அரசாங்கத்தின் இயந்திரங்களாகிய சிங்கள இராணுவத்தினர், சிங்கள பொலிசார் மற்றும் தொல் பொருள் திணைக்கள அதிகாரிகள் உட்பட பல அதிகாரிகள் அங்கிருந்து வழிபடுவதற்காக பௌத்த கட்டுமானங்கள் உருவாக்கபடுகின்றதே தவிர பூர்வீக மாக சிங்கள பௌத்தர்கள் வாழ்கின்ற இடங்கள் என்று எதுவுமே கிடையாது.

வடக்கு-கிழக்கில் பூர்வீகமாக பௌத்தர்கள் வாழ்ந்தால், அங்கு வழிபாட்டுக்காக தாங்களாகவே விரும்பி சட்ட திட்டங்களுக்கமைய விகாரை கட்டி வழிபடலாம். அதற்கு நாங்கள் எந்த விதத்திலும் ஆட்சேபனை தெரிவிக்க போவதில்லை.

தென்னிலங்கையில் கோவில் உள்ளது என்றொரு கருத்து உள்ளது. அங்கு தமிழ் மக்கள் செறிந்து வாழ்கிறார்கள். அவர்கள் சட்டத்திட்டத்திற்குட்பட்டு ஆலயங்களை அமைத்துள்ளனர். அதன் நோக்கம் வழி பாடே தவிர ஆக்கிரமிப்பு அடாவடித்தானம் கிடை யாது என கூறியுள்ளார்.

# வெளிநாட்டுக்குத் தப்பிச் சென்ற போதகர் நாடு திரும்புகின்றார்

ஞாயிற்றுக்கிழமை மீண்டும் இல ங்கை திரும்பவுள்ளதாக சர்ச்சைக் குரிய பிரசங்கங்களை வழங்கிய கிறிஸ்தவ மத போதகர் ஜெரம் பெர்னாண்டோ தனது இன்ஸ்டா கிராம் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

வணக்கம் குடும்பத்தினரே, நீங்கள் அனைவரும் அறிந்தது போல, நான் முன்பு திட்டமிடப்பட்ட அதிகாரப்பூர்வ பயணங்களில் ஈடுபட்டு வருகிறேன். ஞாயிற்றுக் கிழமை நாடு திரும்புவேன் என்று ஒரு செய்தியை வெளியிட்டார்.

ஜெரம்பெர்னாண்டோ என்ற கிறிஸ் தவ மத போதகர் ஏனைய மதங் களை அவமதிக்கும் வகையில் சர்ச்சைக்குரிய பிரசங்கங்களை வழங்கிய காணொளி ஒன்று கடந்த சில நாட்களாக சமூக வலைத் தளங்களில் பரவி நாட்டில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

இதையடுத்து, அவர் கடந்த 14 ஆம் திகதி தனது மனைவி மற் றும் 2 மகள்களுடன் நாட்டை விட்டு வெளியேறியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. எனினும், ஜெரம் பெர்னாண்டோவுக்கு எதிரான பய ணத் தடையை குற்றப் புலனாய் வுப் பிரிவினர் கோட்டை நீதவான் நீதிமன்றில் பெற்றுள்ளனர். இந்த நிலையில் தற்போது ஜெரம் பெர்னாண்டோ ஞாயிற்றுக்கிழமை மீண்டும் நாடு திரும்புவதாக அறி வித்துள்ளார்.

மத நல்லிணக்கத்திற்கு பங்கம் விளைவிக்கும் வகையில் போதகர் ஒருவர் கருத்து வெளியிட்டமை தொடர்பில் உடனடியாக விசா ரணை நடத்தி அறிக்கை சமர்ப் பிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளார்.

பொறுப்பற்ற கருத்துக்கள் மத முரண்பாடுகளை உருவாக்கி நாட்டின் நல்லிணக்கத்தை பாதி க்கும் என ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதி யின் ஆலோசகர், ஜனாதிபதி செயல ணியின் பிரதம அதிகாரி சாகல ரத்நாயக்கவிடம் இந்த உத்தரவை பிறப்பித்த ஜனாதிபதி தெரிவித்தார்.



இதன்படி, போதகரின் கருத்து தொடர்பில் ஜனாதிபதி வழங்கிய உத்தரவுக்கமைய உடனடியாக விசாரணைகளை ஆரம்பிக்குமாறு சாகல ரத்நாயக்க குற்றப் புலனாய் வுப் பிரிவினருக்கு அறிவித்துள் ளார்.ஜெரம் பெர்னாண்டோ என்ற கிறிஸ்தவ மத போதகர் கூறிய கருத்து தொடர்பான காணொளி ஒன்று கடந்த சில நாட்களாக சமூக வலைத்தளங்களில் பரவி நாட்டில் பெரும் சர்ச்சையை ஏற் படுத்தியது.

# வடக்கு கிழக்கில் காணிகளை அபகரிக்க இடமளிப்பது நல்லிணக்க விடயங்களுக்கு பாதிப்பு - ரவூப்ஹக்கீம்



திருகோணமலை பிரதேசத்தில் சியம் நிகாய மஹாநாயக்க தேரர்களின் வழிபாட்டு நிகழ்வை தடுக்க முற்பட்டால், பாரிய அழிவு ஏற்படும் என சரத் வீரசேகர எம்.பி. தெரிவித்திருக்கும் விடயம் பாரிய அச்சுறுத்தலாகும். அதேநேரம் வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் தொடர்ந்தும் காணிகளை அபகரிக்க இடமளித்தால், அது இனப்பிரச்சினைக்குரிய தீர்வுக்கான நல்லிணக்க விடயங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவுப் ஹக்கீம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் கடந்த 12 மே 2023 வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நலன்புரி நன்மைகள் சட்டத்தின் கீழ் அஷ்வசும வேலைத்திட்டம் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்

காணி அபகரிப்புகள் அந்த மக்களை வறுமை நிலைக்கும் வேறு பிரச்சினைகளுக்கும் தள்ளி விடுகின்ற பிரதான பிரச்சினையாகும். யுத்தத்துக்கு பின்னர் காணி அபகரிப்பு பிரச்சினை குறிப்பாக வடக்கில் பாரியளவில் இடம் பெற்று வருகிறது. அதனால் தான் காணி அபகரிப்புகளை உடனடியாக நிறுத்துமாறு தமிழ் அரசியல் கட்சிகளுடனான சந்திப்பின் போது ஜனாதிபதி உத்தர விட்டுள்ளதாக தமிழ் ஊடகங்களில் செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது.

காணி அபகரிப்பு வடக்கு, கிழக்கில் இன்னும் இடம்பெற்று வருவதை காண்கிறோம்.

மேலும், திருகோணமலை பிரதேசத்தில் சியம் நிகாய மஹாநாயக்க தேரர்களின் வழிபாட்டு நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும், அதனை தமிழ் தேசிய கூட்டமைப்பு தடுக்க முற்பட்டால் பாரிய அழிவு ஏற்படும் என பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்திருக்கிறார். இது பாரிய அச்சுறுத்தலாகும். இதனை சாதாரணமாக கருத முடியாது.

அதேநேரம் இந்த அச்சுறுத்தலை விடுக்கும் சரத் வீரசேகர எம்.பி.தான் தேசிய பாதுகாப்பு தொடர்பான பாராளுமன்ற மேற்பார்வை குழுவின் தலைவர். இப்படி அச்சுறுத்தல் விடுக்கும் ஒரு தலைவரிடமிருந்து முன்மாதிரி, அர்ப் பணிப்பை எதிர்பார்க்க முடியுமா என்ற கேள்வி எமக்கு எழுகிறது. இது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

அதேநேரம் கிழக்கில் சில பிரதேசங்களை பௌத்த மயமாக்கும் இவ்வாறான சித்த விளையாட்டினால் நாட்டில் இருக்கின்ற இனப்பிரச்சினை இன்னும் படுமோசமான முறையில் பாதிக்கப்படப் போகிறது. மேலும், திருகோணமலை வெள்ளை மணல் பிரதேசத்தில் தொல்லாயிரம் ஏக்கர் நிலப்பரப்பினை விமானப்படையினர் சுவீகரித்துக் கொள்ள முயற்சி இடம்பெறுவதாக அறியக் கிடைத்தேன்.

அந்த பிரதேசத்தின் ஒரு பகுதியில் குடிமக்களின் வீடுகள் அமைந்திருக்கின்றன. அடுத்த பகுதியில் கடல் அமைந்திருக்கிறது. அந்த இரண்டுக்கும் இடையில் இருக்கும் பாரிய நிலப்பரப்பை, பாதுகாப்பு தேவைகளுக்காக என தெரிவித்துக் கொண்டு விமானப்படை சுவீகரிக்க திட்டமிட்டு வருகிறது. ஆனால், உல்லாச பயணிகளின் தேவைகளுக்கு வசதிகளை ஏற்படுத்துவதற்கே இதனை சுவீகரிக்கப்போவதாக தெரியவருகிறது. இதனால் அங்கு தொழில் வாய்ப்புக்களில் ஈடுபட்டு வரும் மக்களுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இது போன்று காணிகளை சுவீகரிக்கும் நடவடிக்கைகளை ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு வர விரும்புகிறோம். இவ்வாறான நடவடிக்கை கடந்த காலங்களிலும் இடம்பெற்று வந்தன் தற்போது இடம்பெற்று வருகின்றன.

இதே பிரச்சினை திருகோணமலை அரிசிமலை பிரதேசத்திலும் இடம்பெற்று வந்தது. இந்த காணிகளை பாதுகாத்து தருவதாக ஜனாதிபதி உறுதியளித்திருந்தார். அத்துடன். இந்த காணிகளை அபகரிக்க தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளுடன் அமைச்சர் பாதுகாப்பு அதிகாரிகளுடன் மதகுருமார்களும் சேர்ந்து வருகின்றனர். துப்பாக்கிகளுடனே வருகின்றனர்.

இப்படியான அநியாயங்களுக்கு வடக்கு, கிழக்கு பிரதேசங்கள் தொடர்ந்தும் இடமளித்தால், இனப்பிரச்சினைக்குரிய தீர்வுக்கான நல்லிணக்க விடயங்களுக்கு என்ன நடக்கும்? சர்வதேசத்தின் முன்னிலையில், ஜெனீவாவில் இந்த அரசாங்கம் தொடர்ந்தும் மனித உரிமை மீறல்களை மேற் கொண்டு வருகிறது என குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வருவதற்கு மத்தியில் இவ்வாறு காணிகளை அபகரிக்கும் விடயங்கள் தொடர்ந்தால், மக்களை வறுமை நிலையில் இருந்து மீட்பதற்கு எடுக்கும் முயற்சிகளில் பயன் இல்லாமல் போகும் என்றார்.

**(6ம் பக்கத் தொடர்ச்சி)** ஜனாதிபதியுடனான சந்திப்பு தொடர்பில் எம்.ஏ.சுமந்திரன் எம்.பி கூறியதாவது: 15ஆம் திகதி திங்கட்கிழமை சந்திப்பில் விக்கினேஸ்வரன் ஆவணமொன்றை சமர்ப்பித்தார். அந்த ஆவணம் ஏற்கனவே எம்மிடம் கையளிக்கப்பட்டிருந்த போதிலும், நாமனைவரும் அதனை நிராகரித்திருந்தோம். ஜனாதிபதியும் அந்த ஆவணத்தைக் கையில் வைத்திருந்தார்.

மாகாணசபைகளுக்கான இடைக்கால நிர்வாகம் மற்றும் நிர்வாகச்சிக்கல்கள் பற்றி அந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டிருந்த யோசனைகளுக்கு நாம் இணங்கவில்லை. அது பற்றிக் கலந்துரையாடும் நோக்கில் குழுவொன்றை நியமிப்பதற்கான ஜனாதிபதியின் யோசனைக்கும் நாம் இணங்கவில்லை.

மாறாக புதிய அரசியலமைப்பை உருவாக்க வேண்டும் என்று நாம் வலியுறுத்தினோம். ஆனால் அதனை உடனடியாகச் செய்ய முடியாது என்று கூறிய ஜனாதிபதி, அதற்கு இணங்கவில்லை. இரண்டாவதாக மாகாணசபைத் தேர்தலை உடனடியாக நடத்துமாறும், அது குறித்து பாராளுமன்றத்தில் நான் சமர்ப்பித்த தனிநபர் பிரேரணைக்கு ஆதரவளிக்குமாறும் வலியுறுத்தினோம். என்றார் சுமந்திரன்.


கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: 416.439.0224, Cell: 416.450.5011

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# இனப்படுகொலை என்ற சொலைப் பயன்படுத்துவது தவறா? மட்டக்களப்பு கைது குறித்து அம்பிகா சற்குணநாதன் கேள்வி!

மட்டக்களப்பில் இனப்படுகொலை என்ற பதாகையை வைத்திருந்தமைக்காக இளைஞர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளதை சுட்டிக் காட்டியுள்ள இலங்கை மனித உரிமை ஆணைக் குழுவின் முன்னாள் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன் இனப்படு கொலை என்ற சொல்லை பயன்படுத்து வது தவறா என கேள்வி எழுப்பியுள்ளார்

டுவிட்டர் பதிவில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது மட்டக்களப்பு ஆயித்தியமலை நரிபுல்தோட்டத்தில் மே18ம் திகதியை நினைவுகூறுவதற் கான நிகழ்வை ஏஎச்ஏம் என்ற மனித வள நிலையம் ஏற்பாடு செய்திருந்தது. தமிழ் இனப்படுகொலை நினைவுநாள் என்ற பதாகையை வைத்திருந்த மைக்காக ஏஎச்ஏம் அமைப்பின் பணி யாளர் பத்மநாதன் சிரோஜனை ஆயித் தியமலை பொலிஸார் கைது செய்துள்ள னர்.



இலங்கையில் இனப்படுகொலை என்ற சொல்லை பயன்படுத்துவது சட்ட விரோதமானதா? நடந்தது இனப்படு கொலையா அல்லது வேறு பாரதூரமான குற்றமா என்பது குறித்து இலங்கை இணக்க மறுக்கலாம் விவாதிக்கலாம், ஆனால் இனப்படுகொலை என்ற சொல்லை பயன்படுத்துவதும் அது குறித்து விவாதிப்பதும் இனப்படு கொலை இடம் பெற்றதாக விவாதிப்ப தும் சட்டவிரோதமானது இல்லை அவ்வாறு கருதமுடியாது. கைது செய்யப்பட்டவர் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார், அவரை நிபந்தனை யற்ற விதத்தில் விடுதலை செய்வதற்கு பல்வேறு தரப்பினரின் உத்தரவாதம் தேவை என பொலிஸார் தெரிவித்துள் ளனர்.

அவர் எந்த சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார், பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் நடைமுறைக்கு வந்தால் இவ் வாறான கைதுகள் வழமையான விடய மாகி விடும் என அவர் தெரிவித்துள் ளார்

# முள்ளிவாய்க்கால் முற்றத்தில் 14வது ஆண்டு நினைவேந்தல்! உணர்வெழுச்சியுடன் திரண்ட தமிழர்கள்!

14ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நேற்று 18 மே 2023 வியாழக்கிழமை முள்ளிவாய்க்கால் முற்ற த்தில் உணர்வெழுச்சியுடன் முன்னெடு க்கப்பட்டது. முள்ளிவாய்க்கால் பொதுக் கட்டமைப்பினரின் ஏற்பாட்டில் இடம் பெற்ற இந்த அஞ்சலி நிகழ்வு, சரியாக காலை 10.30 மணிக்கு மணியோசை எழுப்பப்பட்டு நினைவேந்தல் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

தொடர்ந்து உயிர்நீத்த உறவுகளுக்கு அகவணக்கம் செலுத்தப்பட்டு, அதனை யடுத்து பொதுச் சுடரேற்றப்பட்டது. முள்ளிவாய்க்கால் இறுதி யுத்தத்தில் தனது குடும்பத்தில் 13பேரை இழந்த மன்னாரைச் சேர்ந்த தாயார் ஒருவர் பொதுச்சுடரினை ஏற்றி வைத்தார். அதேவேளை சம நேரத்தில் ஏனைய சுடர்களும் ஏற்றப்பட்டு அஞ்சலிகள் மேற்கொள்ளப்பட்டன.



அதனைத் தொடர்ந்து முள்ளிவாய்க்கால் பிரகடனம் வாசிக்கப்பட்டது. தென் கைலாய ஆதீன குருமுதல்வர் அகத்தி யர் அடிகளார் அவர்களால் முள்ளி வாய்க்கால் பிரகடனம் வாசிக்கப்பட்டது. அத்தோடு இந்த நினைவேந்தல் நிகழ்வு களில் பங்கேற்ற உறவுகள் கதறி அழுது கண்ணீர் சொரிந்து உணர்வெழுச்சி யுடன் இந்த நினைவேந்தல் நிகழ்வுகளில் பங்கேற்றனர். இந்த நினைவேந்தல் நிகழ்வுகளில் அரசியல் தலைவர்கள், மதத் தலைவர்கள், யாழ் பல்கலைக்கழக மணவர் ஒன்றியத்தினர், முள்ளிவாய்கால் மண்ணில் உயிர் நீத்தவர்களுடைய உற வினர்கள் என பெருந்திரளானவர்களின் பங்கு பற்றலுடன் உணர்வழுச்சியுடன் நினைவேந்தல் முன்னெடுக்கப்பட்டது.

# கொழும்பில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கு குழப்பம் விளைவித்த சிங்கள ராவய அமைப்பு





உள்நாட்டுப் போரின் இறுதி கட்டத்தில் இடம்பெற்ற பேரலங்களில் ஒன்றான முள்ளி வாய்க்கால் இனப்படுகொலை நினைவேந்தலை முன்னிட்டு சிவில் சமூக அமைப்புக்களால் நேற்று 18 மே 2023 வியாழக்கிழமை கொழும்பு - பொரளை கனத்தை மயான சந்தியில் நினைவேந்தல் நிகழ்வு ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. இதற்கான ஏற்பாடுகள் இடம் பெற்றுக் கொண்டிருந்த போது சிங்கள ராவய அமைப்பை சேர்ந்த சிலர் அங்கு வந்து நினைவேந்தலை நிறுத்து மாறு ஏற்பாட்டாளர்களுடன் வாய்தர்க்க த்தில் ஈடுபட்டனர். புலிகளுக்கான நினை வேந்தல் எமக்கு வேண்டாம் என்ற வசனம் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறு அங்கு சென்ற சிங்கள ராவய அமைப்பினர் ஏற்பாடுகளை குழப்புவதற்கும் முயற்சித்தனர். இதனால் அங்கு அமைதியற்ற நிலைமை ஏற் பட்டது. நினைவேந்தல் நிகழ்வு ஆரம் பிக்க முன்னரே அந்தப் பகுதியில் பாது காப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

இந்நிலையில் சிங்கள ராவய அமைப்பின ரால் அமைதியற்ற நிலைமை ஏற்பட்ட போது அங்கு கடமையில் ஈடுபடுத்தப் பட்டிருந்த பொலிஸார் இராணுவத்தினர் மற்றும் விசேட அதிரடிப்படையினர் நினைவேந்தலை நிறுத்துமாறு ஏற் பாட்டளர்களை அறிவுறுத்தினர்.

எனி னும் தாம் எவ்வித குழப்பங்களை ஏற்படுத்தும் நோக்கில் இந்த நிகழ்வை ஏற்பாடு செய்யவில்லை என்பதால் நினைவேந்தலை நிறுத்த முடியாதென ஏற்பாட்டாளர்கள் பாதுகாப்பு தரப்பிடம் தெரிவித்ததாக அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமை ப்பின் ஒருங்கிணைப்பாளர் அருட் தந்தை சக்திவேல் தெரிவித்தார். எவ் வாறிருப்பினும் இவ்வாறான எதிர்ப்புக் களுக்கு மத்தியிலும் அங்கு தீபம் ஏற்றப் பட்டு நினைவேந்தல் அனுஷ்டிக்கப் பட்டதோடு கஞ்சி வழங்கப்பட்டது. இந் நிலையில் சம்பவ இடத்துக்கு பாராளு மன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் உடனடியாகச் சென்றமை குறிப்பிடத் தக்கது.

# 12வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! மே மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.

தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா

செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)

பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)

உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)

உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)

பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்

இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவ ருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர் காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

12 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 12 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒருநாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ?

ஒரு கணம் சிந்தியுங்கள் உறவு களே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

13 மே 2023 முதல் 19 மே 2023 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதர வோடு கடந்த செப்டம்பர் முதல் 12வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ் வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 57வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு கனகசபை பாலசிங்கம்

புங்குடுதீவு 3ம் வட்டாரம் குறிகாட்டுவானைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்தபொறளை பாலன் என்று அன்பாக அழைக்கப்படும் திரு கனகசபை பாலசிங்கம் அவர்களின் 57வது ஆண்டு நினைவுநாள் 16 மே 2023 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு கனகசபை பாலசிங்கம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 3வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு இராஜா இராஜேந்திரராஜா

மானிப்பாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் யாழ்.நல்லூரை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு இராஜா இராஜேந்திரராஜா அவர்களது மூன்றாவது ஆண்டு நினைவு நாள் 20 மே 2023 சனிக்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்குகின்றார்கள். திரு இராஜா இராஜேந்திரராஜா அவர்களின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 19வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி குமாரதாசன் விஜயகௌரி

இணுவில் கிழக்கு இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்த திருமதி குமாரதாசன் விஜயகௌரி அவர்களின் 19வது ஆண்டு நினைவு நாள் 15 மே 2023 திங்கட்கிழமையாகும் அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி குமாரதாசன் விஜயகௌரி அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 13வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி துரையப்பா மங்கையற்கரசி

புளியங்கூடல் தெற்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி மங்கையற்கரசி துரையப்பா அவர்களது 13வது ஆண்டு நினைவு நாள் 14 மே 2023 ஞாயிற்றுக் கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாகவும் தந்தையார் திரு கார்த்திகேசு துரையப்பா அவர்களது நினைவாகவும் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி மங்கையற்கரசி துரையப்பா அவர்களினது ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 2வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு செல்வரெத்தினம் செல்வகுமார்

புன்னாலைக்கட்டுவனைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு செல்வரெத்தினம் செல்வகுமார் அவர்களது இரண்டாவது ஆண்டு நினைவு நாள் 12 மே 2023 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு செல்வரெத்தினம் செல்வகுமார் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சின்னத்தம்பி தவராஜா

அனலைதீவு 5ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விட மாகவும் கொண்டிருந்த திரு சின்னத்தம்பி தவராஜா அவர்களின் முதலாவது ஆண்டு நினைவு நாள் 11 மே 2023 வியாழக்கிழமை யாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு சின்னத்தம்பி தவராஜா அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு கடந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்





13 மே 2023 சனிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி கோணேஸ்வரன் சுதர்சினி தம்பதிகளின் செல்வப்புதல்வி சௌமியா கோணேஸ்வரனின் 20வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வி சௌமியா தனது பெற்றோர்களுடன் சகோதரங்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




13 மே 2023 சனிக்கிழமை கனடாவில் வசிக்கும் இசைஆசிரியை திருமதி சாருமதி மனோகாந்தன் அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றைய தினம் திருமதி சாருமதி மனோகாந்தன் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




14 மே 2023 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி புஸ்பராஜ் சியாமளா தம்பதிகளின் செல்வப்புதல்வன் கார்த்திகனின் 21வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் கார்த்திகன் தனது பெற்றோர்களுடன் சகோதரங்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.





11 மே 2023 வியாழக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி பாலா அருணா தம்பதிகளின் செல்வப்புதல்வன் சாகித்தியனின் 27வது பிறந்த நன்நாளாகும். அன்றைய நாளுக்காக செல்வன் சாகித்தியன் தனது பெற்றோர்களுடன் இணைந்து 14 மே 2023 ஞாயிற்றக்கிழமை அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




11 மே 2023 வியாழக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி பாலா அருணா தம்பதிகளின் செல்வப்புதல்வன் சாகித்தியனின் 27வது பிறந்த நன்நாளாகும். அன்றைய நாளுக்காக செல்வன் சாகித்தியன் தனது பெற்றோர்களுடன் இணைந்து 14 மே 2023 ஞாயிற்றக்கிழமை பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



11 மே 2023 வியாழக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி பாலா அருணா தம்பதிகளின் செல்வப்புதல்வன் சாகித்தியனின் 27வது பிறந்த நன்நாளாகும். அன்றைய நாளுக்காக செல்வன் சாகித்தியன் தனது பெற்றோர்களுடன் இணைந்து 14 மே 2023 ஞாயிற்றக்கிழமை செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.





14 மே 2023 ஞாயிற்றுக்கிழமை புளியங்கூடல் தெற்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி துரையப்பா மங்கையற்கரசி அவர்களது 13வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.





15 மே 2023 திங்கட்கிழமை இணுவில் கிழக்கு இணுவிலைச் சேர்ந்த திருமதி விஜயகௌரி குமாரதாசன் அவர்களது 19வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




16 மே 2023 செவ்வாய்க்கிழமை நயினாதீவைப் பிறப்பிடமாகவும் சுவிஸை வாழ்விடமாகவும் கொண்டிருக்கும் திரு சங்கர் ஏகாம்பரநாதன் அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திரு சங்கர் ஏகாம்பரநாதன் அவர்கள் தனது குடும்பத்தினர் உறவுகளுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




16 மே 2023 செவ்வாய்க்கிழமை புங்குடுதீவு 3ம் வட்டாரம் குறிகாட்டுவானைச் சேர்ந்த பொறளை பாலா அன்று அழைக்கப்படும் திரு கனகசபை பாலசிங்கம் அவர்களது 57வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




19 மே 2023 வெள்ளிக்கிழமை கனடா Exeuitive woodwork Ltd ஊழியர்கள் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.




**முல்லைத்தீவு புனிதபூமி அன்பு இல்லத்தில் வாழும் இவர்களுக்காக**
**28 ஒக்டோபர் 2023 சனிக்கிழமை மாலை 6.00 மணிக்கு**
**இன்னிசை மாலையும் இராப்போசன விருந்தும்!**

# PREMIER DIAGNOSTIC NETWORK

**647•660•0699**
www.pdxn.ca

Scan for Online Booking

## RADIOLOGY & CARDIOLOGY SERVICES

## எங்களுக்காக நாங்கள்!

**தமிழர்களின் நிர்வாகத்தில் நகரின் மத்தியில் நல்லதோர் மருத்துவ பரிசோதனை நிலையம்!**

ரேடியோலஜி, மற்றும் கார்டியோலஜி பரிசோதனைகளிற்காக நீங்கள் பரிந்துரைக்கப்பட்டால், ஆற்றலும், அனுபவமும் மிக்க நிபுணர்களின் சேவைகளை பெற்றுக்கொள்ள தமிழர்களின் நிர்வாகத்தில் நடாத்தப்படும் எங்களின் சேவைகளை நாடுங்கள்.

**தமிழில் தொடர்பு கொள்ள அழையுங்கள்**

**647-494-9909**

- X-RAY
- ULTRASOUND
- BONE DENSITY
- ECHOCARDIOGRAM
- HOLTER MONITOR
- STRESS ECG
- ABPM (24H BLOOD PRESSURE MONITORING)

## PREMIER RADIOLOGY CLINICS

### BELLESMERE X-RAY, ULTRASOUND & BMD
North of Ellesmere & Bellamy
**1920 Ellesmere Road, Suite 311 & 311A**
Scarborough, ON M1H 2V6
Tel: **416-289-2280**
Fax: **416-289-7321**

### BRIMLEY X-RAY, ULTRASOUND & BMD
South of Brimley & Sheppard
**2020 Brimley Road**
Scarborough, ON M1S 4R7
Tel: **416-299-7677**
Fax: **416-299-7948**

Access & Share Your Imaging and Reports Online: **https://pdxn.ca/page/patient-imaging**

## PREMIER CARDIAC CLINICS

Tel: **416-289-3212** • Fax: **416-289-0815**

### BELLESMERE CARDIAC CLINIC
North of Ellesmere & Bellamy
**1920 Ellesmere Road, Suite 307**
Scarborough, ON M1H 2V6

### BRIMLEY CARDIAC CLINIC
South of Brimley & Sheppard
**2020 Brimley Road**
Scarborough, ON M1S 4R7

### ACCREDITATIONS

Cardiac Echo Quality Care and Service by: CorHealth Ontario

Radiology Medical Quality and Standard of Care by: The College of Physicians and Surgeons of Ontario

Affiliated Clinical Site: UHN University Health Network; The Michener Institute of Education at UHN

Accredited Ultrsound Training Program: Accreditation Canada

Infection Control and Cleaning Process by: Public Health Ontario

### FUNDED BY

Ontario Ministry of Health & Long Term Care

"கனடா இந்து" வழங்கும் துர்க்கேஸ்வர மஹாயாக மஹாகும்பாபிஷேக மஹாவிழாவுக்கான சிறப்பிதழ்

# துர்க்கேஸ்வரத்தில் மஹாகும்பாபிஷேகம்

## 18-6-2023 ஞாயிறு காலை 6.00 மணி முதல்

## துர்க்கேஸ்வரம் ஸ்ரீதுர்க்காதேவி அம்பாள் தேவஸ்தானம்
## ஐந்து தள ராஜகோபுரத்துடன் புதிதாய் புனர்நிர்மாணம்



### துர்க்கேஸ்வரத்தில் பக்தர் நிகழ்த்தும் தீபஸ்தாபனத்துடன் கூடிய தீபலட்சுமி பூஜை 16-6-2023 வெள்ளி

பாலரூபத்தில் ஸ்தாபிக்கப்பெற்று பாலாலயத்தில் வீற்றிருக்கும் தெய்வ சக்திகளை, கிரியைகள் மூலமாகவும் மத்திரபூர்வமாகவும் வியாபகமாக்கி, 48 தினங்கள் மந்திரங்களாலும் கிரியைகளாலும் பூஜிக்கப்பெற்ற சக்தி வாய்ந்த யந்திரங்களுடன் ஒன்று சேர்த்து, புதிதாக புனருத்தாரணம் செய்த ஆலயத்தினுள் வரவழைக்கும் போது, முதலாவதாக செய்யப்பெறும் தீபஸ்தாபனம் மேன்மைமிக்கது. சுமங்கலிப் பெண்களும் கன்னிப் பெண்களும் இணைந்து இவ்வழிபாட்டினைச் செய்யவுள்ளனர். பொதுவாக வரலட்சுமி விரத தினத்தில் பக்தர்கள் திருவிளக்குப் பூஜை செய்வார்கள். ஆனால், தீபஸ்தாபனத்தின் போது, தீபலட்சுமிக்கு பூஜையும் அத்துடன் தீபங்களை புதிய ஆலயத்தில் ஸ்தாபிக்கும் பேறும் கிடைக்கின்றது.




ரொறன்ரோ, துர்க்கேஸ்வரம் ஸ்ரீதுர்க்காதேவி அம்பாள் திருக்கோவிலின் மஹாயாக மஹாகும்பாபிஷேக மஹாவிழாவானது எதிர்வரும் 18-6-2023 ஞாயிற்றுக்கிழமை நடைபெற உள்ளது. கனடாவில் முதன் முதலாக 48 தின யந்திர பூஜையுடனும் 12 தினம் கிரியைகளுடனும் 12 கால யாகத்துடனும் 48 தின மண்டலாபிஷேகத்துடனும் இந்த மஹாகும்பாபிஷேகம் நிகழவிருக்கிறது. பல்வேறு நாடுகளில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க அருள்மிகு திருக்கோவில்களில் இருந்து சிவாச்சாரியர்கள் வருகை தருகின்றனர். ஆயிரக்கணக்கான மஹாகும்பபி'ேகங்களை உலகெங்கும் நிகழ்த்திய பிள்ளையார்பட்டி டாக்டர். கி.பிச்சைக் குருக்களின் தலைமையில் மஹாகும்பாபிஷேகம் நடைபெறஉள்ளது

### யந்திரபூஜை ஏப்பிரல் 21ம் திகதி ஆரம்பமாகி நிகழ்ந்துகொண்டிருக்கிறது.

இந்தியாவில் இருந்து பிள்ளையார்பட்டி கற்பகவிநாயகர், சிக்கல் சிங்கார வேலவர், திருச்சி பூமிநாதர், நெடுங்குடி கைலாசநாதர் போன்ற ஆலயங்களில் வழிபடப்பெற்று குருமார்களின் ஆசிகள் பெறப்பெற்று, கனடா வந்தடைந்த "யந்திரங்களுக்கு" துர்க்கேஸ்வரத்தில் விஷேட குருமார்கள் தினமும் பகலும் இரவும் பூஜைகள் நடாத்தி வருகின்றனர். கர்ப்பக்கிரகத்தில் விக்கிரகங்களின் கீழே வைக்கப் பெற்று அருட்சக்தி வழங்கும் சக்திமிகு உலோகத் தகடுகளால் யந்திரங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. மிக நேர்த்தியாகவும் பக்திபூர்வமாகவும் நிகழும் யந்திரபூஜையை தரிசித்து பக்தர்கள் அருள்பெற்றுவருகின்றனர்.

## யூன் 7ம் திகதி
### மஹாகும்பாபிஷேக கிரியைகள் ஆரம்பம்

7-6-2023 புதன் கிழமை காலை 8.30 மணிக்கு விநாயகர் வழிபாட்டுடன் துர்க்கேஸ்வரம் மஹாகும்பாபிஷேகத்தின் பூர்வாங்க கிரியைகள் ஆரம்பிக்கின்றன. முக்கிய அம்சமாக ஏழுவகையான ஹோமங்களை நிகழ்த்தவுள்ளனர்.

| | | |
|---|---|---|
| 7-6-2023 | காலை | கணபதி ஹோமம் |
| 7-6-2023 | மாலை | மஹாலட்சுமி ஹோமம் |
| 8-6-2023 | காலை | நவக்கிரக ஹோமம் |
| 9-6-2023 | காலை | ஸ்கந்த ஹோமம் |
| 10-6-2023 | காலை | நவதுர்க்கா ஹோமம் |
| 10-6-2023 | மாலை | பிரத்தியங்கராதேவி ஹோமம் |
| 11-6-2023 | மாலை | ஸ்ரீவித்யா ஹோமம் |

ஒவ்வொரு ஹோமமும் ஒவ்வொரு தனிச்சிறப்பு உடையவை. அவற்றின் தரிசனமும் பங்கேற்பும் மகத்துவம் வாய்ந்தவை. அவற்றில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் முன்கூட்டியே ஆலயத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். ஒவ்வொரு ஹோமத்தினையும் பல குருமார்கள் இணைந்து செய்யவுள்ளனர். காலையில் நிகழும் ஹோமங்கள் காலை 8:30 மணிக்கு ஆரம்பமாகும். மாலையில் நிகழும் ஹோமங்கள் மாலை 6:00 மணிக்கு ஆரம்பமாகும்.

### மஹாகும்பாபிஷேக யாகபூஜை யூன் 12ம் திகதி முதல் யூன் 18ம் திகதி வரை

துர்க்கேஸ்வரம் திருக்கோவிலின் மஹாகும்பாபிஷேக யாகபூஜைகள் 12-6-2023 திங்கட்கிழமை மாலை 5:00 மணிக்கு அங்குரார்ப்பணத்துடன் ஆரம்பமாகின்றது. அன்று மாலை முதல் 18-6-2023 ஞாயிற்றுக்கிழமை காலை வரை காலையும் மாலையுமாக 12 காலங்கள் யாகபூஜை தினமும் நடைபெற உள்ளது. ஒவ்வொரு யாகபூஜையின் போதும் விஷேட திரவ்விய ஹோமத்திலும் நவசக்தி அர்ச்சனையிலும் ஏராளமான பக்தர்கள் பங்கேற்று அருள்பெறவுள்ளனர். யாகபூஜைகளின் தரிசனம் மட்டுமன்றி ஹோமப்புகை சுவாசம், மற்றும் பங்கேற்புக்களும் மகத்துவம் வாயந்தவை.

### 18-6-2023 ஞாயிறு

**அதிகாலை 4:00 மணி முதல் காலை 6:00 மணி வரை**

12ம் கால யாக பூஜை, ஸ்பர்சாஹூதி, மஹாபூர்ணாகுதி, தீபாராதனை, நவசக்தி அர்ச்சனை, சதுர்வேத, ஸ்தோத்ர, திருமுறை பாராயணம், யாத்திராதானம், கும்பங்கள் (கடங்கள்) வீதிவலம் முதலியன

**காலை 6:30 மணிக்கு விமான (ஸ்துாபி) கும்பாபிஷேகம்**

**காலை 7:00 மணிக்கு ராஜகோபுர கும்பாபிஷேகம்**

**காலை 7:28 மணி முதல் காலை 7:40 மணிக்குள்**
மஹாகணபதி, ஸ்ரீதுர்க்காதேவி மற்றும் அனைத்து மூர்த்திகளுக்கும்

## மஹாகும்பாபிஷேகம்

தொடர்ந்து தசதர்சனை, யஜமானபிஷேகம், மஹாபிஷேகம் விஷேடபூஜை, தீபாராதனை, அர்ச்சனைகள் முதலியன

**பகல் 12:30 மணிமுதல் அன்னதானம் வழங்கப்படும்**

**மாலை 5:30 மணி முதல் இரவு 10:00 மணி வரை**

சாயரட்சை பூஜை, விஷேட இசை நிகழ்ச்சி, வசந்தமண்டப பூஜை, விநாயகர், ஸ்ரீதுர்க்காதேவி, மஹாலட்சுமி, சரஸ்வதிதேவி, முருகப்பெருமான் ஆகிய பஞ்சமூர்த்திகள் முறையே மூஷிகம், சிங்கம், யானை, அன்னம், மயில் ஆகிய வாகனங்களில் ஆரோகணித்து திருவீதிவலம் வந்து அருள்புரிவர்

### துர்க்கேஸ்வரத்தில் இரண்டு தினங்கள் எண்ணெய்க்காப்பு யூன் 16, 17ம் திகதிகளில்

மஹாகும்பாபிஷேகத்தில் நடைபெறுகின்ற ஒவ்வொரு கிரியையிலும் பெரும் அர்த்தங்களும், சிறப்புக்களும் உண்டு. அவற்றில், விஷேட மகத்துவம் கொண்ட ஒரு கிரியை "எண்ணெய்க் காப்பு" என்று அழைக்கப்படுகின்ற தைலாப்பியாங்கம். அடியார்கள் கர்ப்பக்கிரகத்தினுள் சென்று தம் கரங்களால் தர்ப்பைப் புல் எடுத்து எண்ணெய்யில் தொட்டு, இறைவனினின் திருவுருவங்களுக்கு சாத்தி வழிபடுதலையே எண்ணெய்க்காப்பு என அழைப்பர். பொதுவாக, சிவாச்சாரியார்களுக்கு மட்டுமே கர்ப்பக்கிரகத்தினுள் செல்லவோ, இறைஉருவங்களைத் தொடவோ, அபிஷேகிக்கவோ உரிமை உண்டு. ஆயினும், மூலஸ்தானத்துக்குள் செல்வதற்கோ அல்லது இறையுருங்களைத் தொடுவதற்கோ எந்தவொரு நாளிலும் கிடைக்காத பாக்கியம் பக்தர்களுக்கு கிடைக்கின்ற ஒரேயொரு சந்தர்ப்பம் மஹாகும்பாபிஷேகத்தில் நடைபெறும் எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வாகும். இது பன்னிரண்டு ஆண்டுக்கு ஒரு முறையோ அல்லது புதிய ஆலயம் அமைக்கும்போதோ மட்டும் கிடைக்கும். அன்றைய தினம், பக்தர்கள் தர்ப்பையில் எண்ணெய்யைத் தொட்டு, இறைவனின் கண், மூக்கு, செவி, தொப்பிள், பாதம் முதலிய சகல அங்கங்களும் குளிரும்படி சாத்த வேண்டும்.

பக்தர்களின் வசதி கருதி, துர்க்கேஸ்வரம் மஹாகும்பாபிஷேகத்தில் இரு தினங்கள் எண்ணெய்க்காப்பு இடம்பெறும்.




## கனடாவில் நிகழும் மாபெரும் வழிபாடு




உ

ஜெயதுர்க்கா துணை

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

ஜெயதுர்க்கா தேவஸ்தானம் மிசிசாகா

# விக்னவிநாயகர் அலங்கார உற்சவ விஞ்ஞாபனம் 2023



## ஆரம்பம்

19 - 05 - 2023



திருவாக்கும் செய்கருமம் கைகூடும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர் தம் கை.

## பூர்த்தி

28 - 05 - 2023



நிகழும் சோபகிருது வருடம் வைகாசி மாதம் 5ம் நாள்(19-05-2023)வெள்ளிக்கிழமை அன்று விக்னங்கள் தீர்க்கும் விக்னவிநாயகப் பெருமானின் அலங்கார உற்சவம் நடைபெற திருவருள் கூடியுள்ளது. இவ்வரிய திருநாட்களில் அடியார்கள் அனைவரும் ஆசாரசீலர்களாக வருகைதந்து விநாயகப்பெருமானின் திருவருளைப் பெற்றுய்யுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

## விக்னவிநாயகர் அலங்கார உற்சவ விபரம்

மாலை 5.30 அபிஷேகம் (ஸ்நபனம்), 7.00 பூஜை, 7.30 கலை நிகழ்ச்சி, 8.00 வசந்தமண்டபப் பூஜை, தொடர்ந்து அருள் மிகு விக்ன விநாயகர் வீதியுலா வருதல், பிரசாதம் வழங்குதல்.

| | | | | |
|---|---|---|---|---|
| | 18-05-2023 | வியாழன் காலை | கணபதி ஹோமம் | இ.ராகவன் குடும்பம் |
| 1ம் திருவிழா | 19-05-2023 | வெள்ளி | மூஷிக வாகனம் | விசுவலிங்கம் குடும்பம் |
| 2ம் திருவிழா | 20-05-2023 | சனி | யானை வாகனம் | ம.மனோகரன் குடும்பம் |
| 3ம் திருவிழா | 21-05-2023 | ஞாயிறு | சிம்ம வாகனம் | இராஜேஸ்வரன் விஜித்தா குடும்பம் |
| 4ம் திருவிழா | 22-05-2023 | திங்கள் | பூதவாகனம் | வே.செல்வரட்ணம் குடும்பம், உறவினர்கள் |
| 5ம் திருவிழா | 23-05-2023 | செவ்வாய் | மாம்பழத் திருவிழா | அரியாலையூர் மக்கள் |
| 6ம் திருவிழா | 24-05-2023 | புதன் | மஞ்சம் | சதானந்தன் குடும்பம் |
| 7ம் திருவிழா | 25-05-2023 | வியாழன் | வேட்டை | கணேசன் சுப்பிரமணியம் |
| 8ம் திருவிழா | 26-05-2023 | வெள்ளி | சப்பறம் | காரை அன்பர்பள் |
| 9ம் திருவிழா | 27-05-2023 | சனி காலை | தேர்(இரதோற்சவம்) | பொதுஉபயம் (பக்தர்கள் உபயத்திற்கு பதியவும் |
| | | சனி மாலை | தேரடித் திருவிழா | |
| 10ம் திருவிழா | 28-05-2023 | ஞாயிறு காலை | 1008 சங்காபிஷேகம் | மு.ரஜிவீகரன் R.J Multi pac Inc |
| | | ஞாயிறு மாலை | பூந்தண்டிகை | அலங்கார வீதியுலா |
| | 29-05-2023 | திங்கள் காலை | பிராயச்சித்த அபிஷேகம் | வி.விஜியசேகர் குடும்பம் |
| | 30-05-2023 | செவ்வாய் | பூங்காவனம் | (R.J Multi Litho Staff) |
| | 02-06-2023 | வெள்ளி | வைரவர்மடை | கு.ராஜ்குமார் |

### சப்பறத் திருவிழா

5.00(மாலை) அபிஷேகம்(ஸ்நபனம்)
7.00(மாலை) மூலமூர்த்தி பூஜை
7.30(மாலை) கலைநிகழ்ச்சி,
வசந்தமண்டப பூஜை இடம்பெற்று விநாயகர் சப்பறத்தில் வீதியுலாவரும் அருங்காட்சியும் இடம்பெறும்.

### தேர்த்திருவிழா

8.00(காலை) அபிஷேகம்(ஸ்நபனம்)
9.30(காலை) மூலமூர்த்தி பூஜை
10.30(காலை) வசந்தமண்டபபூஜை
11.30(மதியம்) தேர் வீதிவலம்.
தொடர்ந்து பச்சைசாத்தப்பெற்று அவரோகணம் நிகழ்ந்து பஞ்சமுக அர்ச்சனைகள் இடம்பெறும்.

### 1008 சங்காபிஷேகம்

காலை 7.00 மணிக்கு அபிஷேகம் தொடர்ந்து 11.30 மணிக்கு மூலமூர்த்தி, வசந்த மண்டபப் பூஜைகள் நடைபெற்று வீதியுலாவரும் அருங்காட்சியும் இடம்பெறும்.

தேர்த் திருவிழா பொது உபயம். இவ் உபயத்தில் பங்கு கொள்ள விரும்பும் அன்பர்கள் ஆலயத்தில் பதிவு செய்து நீங்களும் உபயகாரர்களாகி, சகல விக்கினங்களையும் தீர்க்கும் விக்ன விநாயகப் பெருமானின் தெய்வீக அருள் பெற்றுய்வீர்களாக!

ஓம் விக்ன விநாயக நம

1808 Drew Road. Mississauga
905 612 1856

Gprinters 905 629 8089

# பதினாலாவது மே பதினெட்டு

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
– நிலாந்தன் –



எதற்காக தமிழ் மக்கள் உயிர்களை, உறுப்புகளை, சொத்துக்களை கல்வியை இன்ன பிறவற்றைத் தியாகம் செய்தார்களோ எதற்காக லட்சக் கணக்கானவர்கள் கொல்லப்பட்டார்களோ காணாமல் ஆக்கப்பட்டார்களோ, அதற்குரிய நீதி தமிழ் மக்களுக்கு கிடைக்க வேண்டும். எந்தப் போராட்டத்தின் பெயரால் தமிழ் மக்கள் அழிக்கப்பட்டார்களோ, அந்தப் போராட்டத்தின் பலன் தமிழ் மக்களுக்கு கிடைக்க வேண்டும். எனவே நினைவு கூர்தல் எனப்படுவது தமிழ்மக்கள் போராடியதன் பலனை பெறுவதற்கான ஓர் அரசியல் செயற்பாடுதான். நீதிக்கான தமிழ்மக்களின் போராட்டத்தில் அதுவும் ஒரு பகுதிதான்.

நவீன தமிழ் வரலாற்றில் ஒரு குறிப்பிட்ட இடத்தில், ஒரு குறிப்பிட்ட கால கட்டத்திற்குள், அதிக தொகை மக்கள் கொல்லப்பட்ட ஒரு கால கட்டத்தை நினைவு கூர்வதே முள்ளிவாய்க்கால் நினைவுகூர்தல் ஆகும். எனவே முழுத் தமிழ் வரலாற்றிலும் நவீன காலத்தில் நிகழ்ந்த மிகப்பெரிய படுகொலை என்ற அடிப்படையில் அந்த உணர்ச்சிப் புள்ளியில் முதலாவதாக, ஈழத்தமிழர்களை ஒரு தேசமாக திரட்டலாம். இரண்டாவதாக உலகெங்கிலும் பரந்துவாழும் தமிழர்களை இன அடிப்படையில் திரட்டலாம். அவ்வாறு திரட்டி அந்த கூட்டுத் துக்கத்தை, கூட்டுக் கோபத்தை, கூட்டு அரசியல் ஆக்க சக்தியாக மாற்றினால் தமிழ் மக்களுக்கு நீதியைப் பெறுவதற்கான உந்துவிசையாக அது அமையும். எனவே நினைவுகூர்தல் எனப்படுவது நீதிக்கான போராட்டத்தின் பிரிக்கப்படவியலாத ஒரு பகுதி.

அதை அவ்வாறு வடிவமைக்க வேண்டும். இப்பொழுது நடைமுறையில் உள்ள பொதுக் ஏற்பாட்டுக் குழுவானது ஒரு குறிப்பிட்ட இடத்தை ஒரு குறிப்பிட்ட நாளில் நிர்வகிக்கும் ஒரு கட்டமைப்பே தவிர அது மேற்சொன்ன அடிப்படையில் உருவாக்கப்பட்ட ஒரு பொதுக் கட்டமைப்பு அல்ல.

கடந்த 14 ஆண்டுகளாக பொருத்தமான ஒரு பொறிமுறையை, பொருத்தமான ஒரு பொதுக் கட்டமைப்பை தமிழ் மக்கள் உருவாக்கவில்லை. காலம் ஆற்றாத துக்கம் என்று எதுவுமில்லை. கூட்டுத் துக்கத்தை உரிய பொறிமுறைக்கூடாக கூட்டு ஆக்கசக்தியாக மாற்றவில்லை என்றால் அது வெறும் துக்கமாகச் சுருங்கி விடும். எனவே ஒரு கூட்டுத் துக்கத்தை கூட்டு ஆக்கசக்தியாக மாற்றி, அதை நீதிக்கான போராட்டத்தின் ஊக்க சக்தியாக மாற்ற வேண்டும். அதற்கு வேண்டிய பொறி முறையும் கட்டமைப்பும் உருவாக்கப்பட வேண்டும். இது முதலாவது.

இரண்டாவது, முள்ளிவாய்க்காலை நினைவு கூர்வது என்பது ஒரு யுத்த களத்தின் இறுதிக் கட்டத்தை நினைவு கூர்வதுதான். அந்த யுத்தகளத்தில் தமிழ் மக்களுக்கு தாமாக முன்வந்து தம் உயிர்களைக் கொடுத்தவர்கள், உறுப்புகளை இழந்தவர்கள், கல்வியை இன்னபிறவற்றை இழந்தவர்கள், என்று ஆயிரக்கணக்கானவர்கள் உண்டு. போரில் நேரடியாக சம்பந்தப் படாமலேயே கொல்லப்பட்டவர்களும் காணாமல் ஆக்கப்பட்டவர்களும் உண்டு. அவர்களனைவர்க்கும் உதவி தேவை. நிவாரணம் தேவை. ஆறுதல் தேவை. ஆனால் கடந்த 14 ஆண்டுகளில் எத்தனை பேருக்கு அவ்வாறான உதவிகள் கிடைத்திருக்கின்றன? புலம்பெயர்ந்த தமிழ்ச்சமூகம் குறிப்பிடத்தக்க அளவிற்கு உதவிகளை செய்கின்றது. ஆனால் அது ஒரு மையத்திலிருந்து திட்டமிடப்பட்ட, ஒரு மையத்தில் இருந்து வழங்கப்படுகின்ற உதவி அல்ல. கடந்த 14 ஆண்டுகளில் போரால் பாதிக்கப்பட்ட பலர் கைவிடப்பட்டிருக்கிறார்கள். போரில் ஈடுபட்ட பலர் கைவிடப்பட்டிருக்கிறார்கள், அல்லது அவமதிக்கப்பட்டிருக்கிறார்கள். இறுதிக் கட்டப் போரில் தமது குடும்பத்தின் உழைக்கும் நபரை அல்லது நம்பிக்கை நட்சத்திரமாக இருந்தவரை அல்லது வருமான வழியை இழந்த பல குடும்பங்கள் உண்டு. அக்குடும்பங்கள் யாவும்



கடந்த 14 ஆண்டுகளில் தேறி எழுந்து விட்டனவா இல்லையா என்று பார்க்க வேண்டும்.போரால் பாதிக்கப்பட்ட ஒரு குடும்பத்தின் வீட்டில் அல்லது ஒரு தியாகியின் வீட்டில் அல்லது காணாமல் ஆக்கப்பட்டவரின் வீட்டில் அடுப்பு எரியவில்லை என்றால், முள்ளிவாய்க்காலில் ஏற்றப்படும் சுடர்களின் மகிமை குறைந்து விடும். எனவே போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்கு ஒரு பொருத்தமான பொறிமுறையும் அதற்கு வேண்டிய கட்டமைப்பும் தேவை.

புலம்பெயர்ந்த தமிழ்மக்களிடம் போதியளவு பணம் உண்டு.உதவுவதற்கு விருப்பமும் உண்டு.ஆனால் பொருத்தமான ஒரு பொறிமுறையை, பொருத்தமான ஒரு கட்டமைப்பை யார் உருவாக்குவது? கடந்த 14 ஆண்டுகளாக அவ்வாறான கட்டமைப்புகளை ஏன் உருவாக்க முடியவில்லை?

குறிப்பாக,முன்னாள் இயக்கத்தவர்களின் கதி என்னவென்று பார்க்க வேண்டும். நடுத்தர வர்க்கத்தை சேர்ந்தவர்கள் வசதியான குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று விட்டார்கள். அல்லது நாட்டில் ஏதோ ஒரு விதத்தில் செற்றில்ட் ஆகி விட்டார்கள். ஆனால் இப்பொழுதும் செற்றில்ட் ஆகாத பல குடும்பங்கள் உண்டு. 2009க்குப் பின் முன்னாள் இயக்கத்தவர்கள் மத்தியில் குடும்பங்கள் பிரிந்திருக்கின்றன. பிள்ளைகள் கைவிடப்பட்டுள்ளன. பெற்றோர் அனாதைகள் ஆகியிருக்கிறார்கள். போரில் பட்ட காயத்தின் விளைவாக ஏற்பட்ட நோய்க்கு மருத்துவம் செய்யக் காசு இல்லாமல் தத்தளிக்கும் பலர் உண்டு.என்ன நோய் என்று தெரியாமலேயே இறந்து போன பலர் உண்டு. இவர்களுக்கெல்லாம் உதவ ஏதாவது கட்டமைப்பு இருக்கிறதா? இல்லையென்றால் யார் பொறுப்பு?

இலங்கைத் தீவிலேயே போரால் பாதிக்கப்பட்ட தரப்புக்களில் இப்பொழுதும் அதிகம் ஆபத்துக்கு உள்ளாகக் கூடிய ஒரு வகுப்பினராக(most vulnerable) காணப்படுவது முன்னாள் இயக்கத்தவர்கள் தான். நாட்டின் சட்ட அமைப்பின்படி புனர்வாழ்வு ஒரு தண்டனை அல்ல என்பதனை கடந்த 14 ஆண்டு காலம் நிரூபித்திருக்கிறது. இந்நிலையில் மீண்டும் மீண்டும் ஒரே குற்றத்துக்காகத் தண்டிக்கப்படக்கூடிய ஒரு தரப்பாக முன்னாள் இயக்கத்தவர்கள் காணப்படுகிறார்கள். அது தொடர்பாக நமது சட்டத்தரணிகள் என்ன செய்திருக்கிறார்கள்? தனிப்பட்ட வழக்குகளில் தோன்றி குறிப்பிட்ட முன்னாள் இயக்கத்தவரை விடுதலை செய்திருக்கிறார்கள் என்பது உண்மை. ஆனால் அதை ஓர் அரசியல் விவகாரமாக மாற்றி அதற்கு வேண்டிய சட்ட ஏற்பாடுகளைக் கொண்டு வர ஏன் ஒருவரும் முயற்சிக்கவில்லை? அது மட்டுமல்ல,முன்னாள் இயக்கத்தவர்கள் புனர்வாழ்வின் பின் ஜனநாயக அரசியல் இறங்கினார்கள்.அவ்வாறு இறங்கியவர்கள் கூட்டமைப்பு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி போன்றவற்றில் இணைந்து தேர்தல் கேட்டார்கள். துயரம் என்னவென்றால் ஒருவருமே தேர்தலில் பெறுமதியான வெற்றிகளைப் பெறவில்லை. துயிலுமில்லங்களில் தமிழ்மக்கள் விட்ட கண்ணீர் யாவும் எங்கே போய் சேருகின்றது? அதை யார் வாக்குகளாக மாற்றுகிறார்கள்?

உன்னுடைய சமூகத்திற்காக நீ கல்வியைத் துறந்தாய், உறுப்புகளை இழந்தாய், உயிரைக் கொடுக்கச் சித்தமாக இருந்தாய், ஆனால் உனக்காக இந்தச் சனம் குறைந்தது உள்ளூராட்சி சபையில் ஒரு வட்டாரத்துக்கு தேவையான ஆயிரம் வாக்குகளைக் கூடத் தரவில்லையே? அப்படியென்றால் உன்னுடைய இறந்த காலத்துக்குப் பொருள் என்ன? என்று ஒரு முன்னாள் இயக்கத்தவரின் பிள்ளை கேட்டால், அதற்கு அந்த தகப்பன் அல்லது தாய் என்ன பதில் சொல்ல முடியும்? அதே கேள்விக்கு தமிழ் மக்கள் என்ன பதில் சொல்லப் போகிறார்கள்?

முன்னாள் இயக்கத்தவர்கள் தடுப்பிலிருந்து விடுவிக்கப்பட்ட பின் அவர்களை தடுப்பில் வைத்திருந்த தரப்பு அவர்களோடு உறவுகளைப் பேணும். அது ஒரு யதார்த்தம்.அ வ்வாறு பேணுவதன் மூலம் அரசாங்கம் இரண்டு விடயங்களைச் சாதிக்கலாம்,

ஒன்று,அவர்களைக் கண்காணிக்கலாம், இரண்டு, அவர்களோடு தொடர்ந்து தொடர்புகளைப் பேணினால், அவர்களுடைய சொந்த மக்களே முன்னாள் இயக்கத்தவர்களை சந்தேகிப்பார்கள். எதிரியின் ஆட்கள் என்று முத்திரை குத்துவார்கள்.எந்த சமூகத்துக்காக அவர்கள் போராடினார்களோ, அந்தச் சமூகமே அவர்களைப் புறமொதுக்கி, அவமதித்து விலகிச் செல்லும் ஒரு நிலையை ஏற்படுத்தலாம்.

கடந்த 14 ஆண்டுகளில் தமிழ்க் கட்சிகளே அவ்வாறு முன்னாள் இயக்கத்தவர்களைக் குற்றம்சாட்டி வருகின்றன. முன்னாள் இயக்கத்தவர்களில் ஒரு பகுதியினர் அவ்வாறு அரசு புலனாய்வுத் துறையோடு சேர்ந்து செயல்படக் கூடும். ஆனால் அதற்காக எல்லாரும் அப்படியல்ல.

கடந்த 14 ஆண்டுகளில் தேர்தலில் இறங்கிய முன்னாள் இயக்கத்தவர்களில் யாருமே பொருத்தமான வெற்றிகளை பெறாததற்கு என்ன காரணம்? இந்த விடயத்தில் முன்னாள் இயக்கத்தவர்களின் கட்சியை அரச புலனாய்வுத் துறையின் ஆட்கள் என்று விமர்சிக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியில் நின்று தேர்தல் கேட்டவர்களும் இதுவரை வெற்றி பெறவில்லை என்பதனை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். எனவே இறந்தவர்களை நினைவு கூர்வது என்பது அவர்கள் கொல்லப்பட்ட யுத்த களத்தை நினைவு கூர்வது தான். அந்த யுத்த களத்தில் தமது சமூகத்துக்காகப் போராடியவர்களை அவர்களுடைய நோக்கு நிலையில் இருந்து புரிந்து கொள்ள முயற்சிப்பதும் தான். இது இரண்டாவது.

மூன்றாவது, இறந்தவர்களை நினைவு கூர்வது என்பது, அடுத்தடுத்த தலைமுறைகளுக்கு நினைவுகளைக் கடத்துவது. நீதிக்கான தமிழ்மக்களின் போராட்டம் மேலும் நீண்ட காலத்துக்கு இழுபடலாம் அதுமட்டுமல்ல கடந்த 14 ஆண்டுகளில் தொழில்நுட்பப் பெருக்கம் காரணமாகவும் ,தலைமைத்துவ வெற்றிடம் காரணமாகவும், புதிதாக எழுந்து வரும் ஒரு தலைமுறை பெருமளவுக்கு அரசியல் நீக்கம் செய்யப்பட்டதாகவோ,அல்லது இலட்சிய நீக்கம் செய்யப்பட்டதாகவோ மாறிவருகின்றது. அந்தத் தலைமுறைக்கும், உலகெங்கிலும் புலம்பெயர்ந்து சிதறி வாழும் ஈழத்தமிழர்களின் அடுத்தடுத்த தலைமுறைகளுக்கும் நினைவுகளைக் கடத்த வேண்டியிருக்கிறது. நினைவுகளின் தொடர்ச்சிக்குள் ஒரு தேசத்தைக் கட்டியெழுப்ப வேண்டியிருக்கிறது. அதற்கு நினைவு கூர்தல் அவசியம். இது மூன்றாவது.

நாலாவதாக, நினைவு கூர்தல் எனப்படுவது, ஒரு கூட்டுச் சிகிச்சை போன்றது. துக்கத்தை கொட்டித் தீர்க்கும் நாளும், இடமும் அது. வெளி வழியவிடப்படாத துக்கம் உள்ளுக்குள் கிடந்து குமைந்து அடங்காத கோபமாக மாறிவிடும். அல்லது நோயாக மாறிவிடும். எனவே உளவியல் அர்த்தத்திலும் பண்பாட்டு அர்த்தத்திலும் துக்கத்தை வெளிவழிய விடவேண்டும். அந்த அடிப்படையில் நினைவு கூர்தல் என்பது ஒரு குணமாக்கல் செய்முறை.ஒரு பண்பாட்டுச் செய்முறை.

மேற்கண்ட நான்கு முக்கிய காரணங்களையும் முன்வைத்து நினைவு கூர்தலை ஒழுங்குபடுத்த வேண்டும். ஆனால் கடந்த 14 ஆண்டுகளாக நினைவு கூர்தல் அவ்வாறு ஒழுங்குபடுத்தப்படுகின்றதா? அவ்வாறு ஒழுங்குபடுத்தப்படவில்லை என்றால் அதற்கு யார் பொறுப்பு?

இந்தக் கேள்வியை மறு வளமாகக் கேட்டால் தமிழ் மக்களுக்கு யார் தான் கேட்க வேண்டும். ஏனென்றால் கடந்த 14 ஆண்டுகளாக தமிழ் மக்களின் அரசியல் எனப்படுவது கட்சி அரசியலாகத்தான் காணப்படுகின்றது. கொழும்பு அல்லது வெளித்தரப்புகள் முன்னெடுக்கும் நடவடிக்கைகளுக்கு பதில்வினை ஆற்றும் அரசியலாக தறுக்கணித்துப் போய்விட்டது.அது தேசத்தை கட்டியெழுப்பும் ஓர் அரசியல் அல்ல.

சிங்கள பௌத்த மயமாக்கலுக்கு எதிராகவும், காணிப் பறிப்புக்கு எதிராகவும், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி கேட்டும் தமிழ்மக்கள் போராடுகிறார்கள் தான். ஆனால் அவற்றில் பெரும்பாலானவை,எனது கடந்த வாரக் கட்டுரையில் கூறியது போல, பதில் வினையாற்றும் (reactive)நிகழ்வு மைய அரசியல் தான் (22ம் பக்கம் பார்க்க)

# இரண்டாம் உலகப் போரில் யூத இன படுகொலை



# முடிவிலா துயரின் முடிவில் உருவான இஸ்ரேல் தேசம்

ஐங்கரன் விக்கினேஸ்வரா

(மூவாயிரம் ஆண்டுகால யூதர்களின் தொடர் துயரங்களுக்கு முற்றுப் புள்ளியாக எழுந்ததே இஸ்ரேல் எனும்தேச உருவாக்கமாகும்.)

ஹிட்லர் ஆட்சிப் பொறுப்பு ஏற்றதிலிருந்து, யூத இன அழிப்பை நடைமுறைப்படுத்துவது என்பதை ஒவ்வொரு படியாக, 'யூதர்களின் கேள்விக்கு இறுதியான தீர்வு" என்று கூறப்பட்ட அழிப்புக் கொள்கையயின் படி நிகழ்ந்தது. இதன் முன்பே சுமார் மூவாயிரம் ஆண்டுகால வரலாற்றில் பல்வேறு நாட்டினத்தவர்களால் யூதர்கள் சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டுள்ளனர் என வரலாற்றுச் சான்றுகள் தெரிவிக்கின்றன.

**இனப் படுகொலை வதை முகாம்கள்:**

இரண்டாம் உலகப் போரின் முன்னாக ஜெர்மனியிய அரசு யூதர்களை குடியுரிமைச் சமூகத்திலிருந்து வெளியேற்றுவதற்கான சட்டங்களை நிறைவேற்றியது. அதில் நியூரம்பெர்க் சட்டம் 1935 குறிப்பிடத்தக்கது. இப்படுகொலைகளுக்காக 1933 இல் தொடங்கி நாஸிகள் வதை முகாம் வலைப்பின்னல்களை அமைக்கத் தொடங்கினர்.

1941 இலிருந்து 1945 வரை, யூதர்கள் ஒரு இனப்படுகொலை மூலம் திட்டமிட்டு கொலை செய்யப்பட்டனர். இது ஐரோப்பாவின் பிற மக்களிடையே நடைபெற்ற அடக்குமுறை மற்றும் படுகொலை நிகழ்வுகளின் ஒரு பகுதியாக நிகழ்ந்தது.

**ஹாலோகோஸ்ட் இனப்படுகொலை:**

இப் பெரும் இன அழிப்பு இரண்டாம் உலகப் போரில் , 6 மில்லியன் ஐரோப்பிய யூதர்கள் ஜெர்மனியில் திட்டமிட்டுப் படுகொலை செய்யப்பட்ட நிகழ்வைக் ஹாலோகோஸ்ட் என்று குறிப்பிடுவர்.



பல அறிஞர்கள் பெருமளவில் இந்த இன அழிப்பில் கொல்லப்பட்டனர். ஜெர்மன் அரசு இதனை 'யூதர் பிரச்சினைக்கான இறுதித் தீர்வு" என வர்ணித்தது. நாஸி ஜெர்மனியில் இவ்வாறு படுகொலை செய்யப்பட்ட எல்லாப் பிரிவினரதும் மொத்தத் தொகை 9 தொடக்கம் 11 மில்லியன் வரை இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

மே- ஜூன் 1944 இல் ஆஸ்ச்விட்ஸ் வதைமுகாமில் யூத மக்களை கொல்ல 'தேர்வு" நடைபெற்றது. வலப்பக்கம் உள்ளவர்கள் அடிமை வேலைக்கும், இடப்பக்கத்தில் உள்ளவர்கள் வாயு அறைக்கும் அனுப்பப்படும ஒளிப்படம் சாட்சியாக இன்றும் உள்ளது. ஜெர்மனியின் அரசினால் பல படிகளில் யூத படுகொலைகள் நிறைவேற்றப்பட்டன.




கிழக்கு ஐரோப்பாவில் புதிய பகுதிகளைக் கைப்பற்றிய ஜெர்மனி, சிறப்புப் படையணிகள் மூலம், யூதர்களையும், அரசியல் எதிரிகளையும் கொன்று குவித்தது. யூதர்களும், ரோமாக்களும் நெருக்கடியான பகுதிகளில் அடைத்து வைக்கப்பட்டுப் பின்னர் அங்கிருந்து புகையிரத தொடர்வண்டிகள் மூலம் நூற்றுக் கணக்கான மைல்கள் தொலைவில் இருந்த கொலை முகாம்களுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். பலர் வழியிலேயே இறந்து போயினர். எஞ்சியோர் நச்சுவாயு அறைகளுள் அடைத்துக் கொல்லப்பட்டனர்.

1942 இன் நடுப்பகுதியில், பாதிக்கப்பட்டவர்கள் தொடர்ந்து தொடருந்துகள் மூலம் வதை முகாம்களுக்கு கடத்தப்பட்டனர். பயணத்தின் கொடுமையைத் தாங்கி உயிர் பிழைத்தவர்கள் புகை அரங்குகளில் திட்டமிட்டு கொல்லப்பட்டனர். இக் கொடுமை ஐரோப்பாவில் 1945 ஏப்ரல் - மேயில் இரண்டாம் உலகப்போர் முடிவு வரை தொடர்ந்தது.

**வார்சா யூத வீரர்கள் கிளர்ச்சி :**

ஜெர்மனி அரசால் இனப்படுகொலை தொடர்ந்த போது, யூத இளைஞர்கள் தங்களின் கிளர்ச்சி ஆயுதப் படைக் குழுக்களை சிறிய அளவில் உருவாக்கினர்.

மிகக் குறிப்பிடத்தக்க வகையில் 1943 இன் வார்சா கிளர்ச்சி நிகழ்வு எழுந்தது. அதில் ஆயிரக்கணக்கான ஆயுதங்களை கொண்ட யூத வீரர்கள் வாபன் சுத்ஸ்டாபலை கரையில் நான்கு வாரங்களுக்கு ஜெர்மனிய படைகளை தடுத்து போரிட்டனர்.

20000 - 30000 யூத போராளிகள், கிழக்கு ஐரோப்பாவில் நாஸி படைகளையும் அவர்களது கூட்டாளிகளையும் எதிர்த்து போரிட்டனர். அதே போல பிரஞ்சு யூதர்கள், பிரஞ்சில் நாஸி எதிர்ப்பு நடவடிக்கைகளில் பங்கெடுத்து நாஸி படைகள் மற்றும் விட்சி பிரஞ்சு அதிகாரத்திற்கெதிராக கொரில்லா போர் முறையில் போரிட்டனர். ஆயிரத்துக்கு மேற்பட்ட ஆயுதம் தாங்கிய யூத கிளர்ச்சிகள் நடந்தன.

நீண்ட காலமாக யூதர்கள் சந்தித்த ஏமாற்றங்களும் துயரங்களும் எப்படியெல்லாம் அவர்களை உறுதியானவர்களாகவும், மிகுந்த தேசப் பற்றுள்ளனவர்களாகவும் இன்று உலக அரங்கில் கொண்டுவந்து நிறுத்தியுள்ளது என்பதே இஸ்ரேல் தேச உருவாக்கத்தின் மூலம் காணலாம்.

இரண்டாம் உலகப் போரின் பின்னர் சர்வதேச வர்த்தகத்தில் எழுபது விகிதம் யூதர்களின் கைவசம் உள்ளது. அதற்கு ஒப்பாக அழகுசாதன பொருட்கள் நாகரிக உடைகள், உணவுப் பொருட்கள் தயாரிப்பு, ஆயுதங்கள் உற்பத்தி என அனைத்திலும் யூதர்களின் பங்கு அதிகம் உள்ளது.

**இஸ்ரேல் தேச உருவாக்கம் :**

இரண்டாயிரம் ஆண்டுகளாக நாடின்றி தவித்த யூதர்களுக்கு, 1948 ஆம் ஆண்டு ஐ.நா.வின் அங்கீகாரத்துடன் அரபு முஸ்லிம்களின் எதிர்ப்பையும் மீறி பாலஸ்தீனத்தில் இஸ்ரேல் எனும் நாடு உருவானது. அவர்களின் தீராக் கனவானது, தேசப்பற்றை வெளிக் கொணர்ந்தவர்களாக இன்று உலக அரங்கில் கொண்டுவந்து நிறுத்தியுள்ளது என்பதை இஸ்ரேல் தேச உருவாக்கத்தின் மூலம் காணலாம்.

இஸ்ரேல் தேசம் உருவானபோது அங்கு யாரும் ஹிப்ரு மொழி பேசவில்லை. எனினும் தாய் மொழியின் அவசியம் கருதி அந்த மொழியினை மீட்டெடுக்க வேண்டிய தேவையிருந்ததனால் அனைத்து யூதர்களுக்கும் ஹிப்ரு மொழி கட்டாயமாக பயிற்றுவிக்கப்பட்டது.

உலகில் அதி கூர்மையான அறிஞர்களை படைத்த இனமாக யூத மக்கள் விளங்குகின்றனர். உலக நாடுகளில் இதுவரையில் 902 பேருக்கு நோபல் பரிசு வழங்கப்பட்



டுள்ளது. அதில் 203 பேர் யூதர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இதில் மருத்துவத்துறையை சார்ந்தவர்கள் 56 அறிஞர்களும் உள்ளனர். அத்துடன் இயந்திரவியலில் நோபல் பெற்றவர்கள் 55 யூத அறிஞர்களும், வேதியியலில் 36, பொருளாதாரத்தில் 32, இலக்கியத்தில் 15, மற்றும் அமைதிக்கான நோபல் பரிசு 9 பேருக்கும் வழங்கப்பட்டுள்ளது.

ஏவுகணைகளை வழியிலேயே தடுத்து தாக்கியழிக்கும் தொழில்நுட்ப திறனை இஸ்ரேல் உருவாக்கி உள்ளது. இராணுவ தளவாடங்கள், போர் விமானங்கள், நுணுக்கமான இயந்திர தயாரிப்புகள் போன்றவற்றில் பல வளர்ந்த உலகநாடுகளுக்கு கடுமையான போட்டியாக இஸ்ரேல் நாடு உள்ளது. உலகில் வல்லமை கொண்ட விமானப்படை உள்ள நாடுகளின் வரிசையில் அமேரிக்கா ரஸ்யா சீன ஆகிய



நாடுகளுக்கு அடுத்த இடத்தில் இருப்பது இஸ்ரேல் என்பதும் யூதர்களுக்கு பெருமையே.

இன்றைய காலகட்டத்தில் அமேரிக்கா ஐரோப்பா கண்டங்களில் அதிஉயர் பதவிகளில் பாரிய எண்ணிக்கையில் இருப்பவர்கள் யூதர்கள் எனலாம். விஞ்ஞானம் சினிமா என எந்த துறையினை எடுத்துக்கொண்டாலும் யூதர்கள் முன்னிலையில் இருக்கின்றார்கள். பல நாடுகளின் பொருளாதர வளர்ச்சிக்கு யூத நிறுவனங்கள் பாரிய பங்களிப்பை வழங்கியுள்ளன. யூத மக்களினதும், இஸ்ரேல் தேசத்தின் முக்கிய மூலதனம் அவர்களது திறன்சார் அறிவும் கடும் உழைப்பும்தான். ■

# நீதி கோரும் தமிழ் அரசியலின் தோல்வி?

கட்டுரையாளர்:-
தாயகத்தில் இருந்து
– யதீந்திரா –



முள்ளிவாய்க்கால் அவலம் இடம் பெற்று 14 வருடங்கள். முள்ளிவாய்க்கால் என்பது, ஒரு ஆயுத போராட்டத்தின் தோல்வியின் விளைவாகும். இந்த பின்புலத்தில் முள்ளிவாய்க்காலை நினைவு கொள்வதென்பது, இன்னொரு வகையில் விடுதலைப் புலிகளின் வீழ்ச்சியை, அழிவையும் நினைவுபடுத்துவதாகும். 2010இல், இந்தக் கட்டுரையாளர், பின்வருமாறு எழுதியிருந்தார். அதாவது, இலங்கையில் ஒரு மனிதப் பேரவலம் நிகழ்ந்தது பற்றி, அதிகம் எழுதி ஓய்ந்துவிட்டது. முன்வைக்கப்பட்ட கண்டனங்களும் ஏராளம்.

அவர் இவர் எனப் பலர் வரக்கூடும் என ஊட்டப்பட்ட நம்பிக்கைகளும் அலாதியானவை. இறுதியில் நடந்தது எதுவுமில்லை. இனி முள்ளிவாய்க்காலை நினைவு கூர்ந்து வருடங்கள் தோறும் நாம் கல்லறைகளுக்கு வெள்ளையடித்து நம் துயரை போக்கிக் கொள்ளலாம். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் நம் மீது மேற் கொள்ளப்பட்ட ஒடுக்கு முறைக்கு எதிரான நினைவு தினங்கள் அனைத்தும் இயலாமையின் வெளிப்பாடாக இருந்திருக்கின்றனவே தவிர செயலுக்கான அணிச் சேர்க்கையாக, செயலுக்கான முனைப்பாக இருந்ததில்லை. இந்த வரிகள் அடங்கிய கட்டுரை, 'நீதியும் நவீன அரசியலும் 'என்னும் தலைப்பில், 'காலத்துயரும் காலத்தின் சாட்சியும்' என்னும் தலைப்பிலான, எனது நூலிலும் இடம்பெற்றது.

யுத்தத்திற்கு பின்னரான கடந்த 14 வருடங்களில், இந்த எதிர்கூறலை தாண்டி, இன்னும் தமிழ் தேசிய அரசியல் பயணிக்கவில்லை. இது எனது எழுத்தின் வெற்றியெனலாம் ஆனால் மக்களின் நிலையில் ஒரு மோசமான தோல்வியாகும். ஏனெனில் கடந்த 14 வருடங்களில் தமிழ் தேசிய அரசியலால் முன்நோக்கி பயணிக்க முடியவில்லை. 2009இற்கு பின்னர், தமிழ் தேசிய அரசியலை தாங்கிப் பிடிப்பவர்களாக நம்பப்பட்ட அனைவருமே இதற்கான பொறுப்பை ஏற்க வேண்டும்.

இப்போது தமிழ் தேசிய அரசியல் முள்ளிவாய்க்கால் கஞ்சியில் திருப்தி காண்கின்றது. ஆனால் மக்களை பொறுத்தவரையில் இவற்றை சாதாரணமாக கடந்து செல்வதாகவே தெரிகின்றது. சித்திரா பருவதத்திற்கு கஞ்சி குடிப்பதற்கும், இதற்கும் பெரிய வேறுபாடுகளை காணமுடியவில்லை. ஏனெனில் அரசியல் தலைமையற்ற சமூகமொன்றில் எவ்வாறான நிகழ்வுகளை முன்னெடுத்தாலும் கூட, அதற்கு அரசியல் பெறுமதியிருக்கப் போவதில்லை. தமிழர் அரசியல் கடந்த காலத்தின் மீதான பரிவுணர்விற்கும், கடந்து செல் வேண்டிய அரசியல் உண்மைகளுக்கும் இடையில் சிக்கிக் கிடக்கின்றது.

இந்த விடயத்தை பலரால் சரியாக புரிந்து கொள்ள முடியவில்லை, புரிந்து கொண்டவர்களால் துனிகரமாக பேசமுடியவில்லை. இந்த பின் புலத்தில் நோக்கினால் 2009இற்கு பின்னரான நமது தமிழ் தேசிய அரசியல் ஆய்வுகளில் வறுமை குடிகொண்டுள்ளது. யதார்த்தங்களை எதிர் கொள்ள முடியாமல், நமது ஆய்வாளர்கள் என்போர் பலர் தடுமாறிக் கொண்டேயிருக்கின்றனர்.

தமது கருத்துருவாக்கங்கள் தோல்வியுற்றிருக்கின்ற என்பதையும் அவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. இதற்கு ஒரு காரணமுண்டு. எழுதுவதன் மூலம் ஒரு பிரமுக அடையாளம் கிடைத்து விடுகின்றது. பின்னர் அதனை எப்படியாவது பழுது படாமல் தக்க வைத்துக் கொள்ள வேண்டுமென்னும் ஆசையையிலிருந்து விடுபட முடியாமல் இருக்கின்றது.

சாதாரண மக்களின் மனநிலை வேறு. அவர்கள் எப்போதும் உணர்ச்சி வசப் பட்டவர்களாகவே இருப்பவர். அதிலும் முப்பது வருடங்களுக்கு மேலான யுத்தச் சூழலொன்றுக்குள் சிக்கியிருந்த மக்கள் கூட்டமொன்றில் இப்போது பல தரப்பட்டவர்கள் இருக்கின்றனர். விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் என்போர் இருக்கின்றனர். விடுதலைப் புலிகள் மீது அனுதாபமுள்ளவர்கள் இருக்கின்றனர். விடுதலைப் புலிகள்



அமைப்பிலிருந்து உயிரிழந்தவர்கள் பெற்றோர்கள், உறவினர்கள் என்னுமொரு தொகுதி மக்களுண்டு. விடுதலைப் புலிகள் அமைப்பின் மீது கோபமும், விமர்சனமுள்ளவர்கள் இருக்கின்றனர். விடுதலைப் புலிகளை விரும்பா விட்டாலும் கூட, பொதுவில் ஆதரவாளர்கள் போன்று நடிப்பவர்கள் இருக்கின்றனர். இவை எவற்றிலுமே அக்கறையற்று, தானுண்டு, தங்களின் வாழ்க்கையுண்டு என்றிருப்பவர்கள் இருக்கின்றனர். தமிழ் மக்களில் இவர்களே பெரும்பாண்மையினரவார். ஆனால் யுத்தத்திற்கு பின்னரான கடந்த 14 வருடங்களில் யுத்தகாலத்தின் நினைவுகளிலிருந்து அதிகமான பெரும்பாண்மையான மக்கள் வெளியில் வந்து விட்டனர். இதற்கு கடந்த நாடாளுமன்ற தேர்தல் முடிவுகளே சிறந்த உதாரணம்.

யுத்தத்தின் அவலங்களை வைத்து அரசியல் செய்ய வேண்டிய தேவை அரசியல் கட்சிகளுக்கு இருந்தாலும் கூட, சாதாரண மக்களோ அதிலிருந்து அதிக தூரத்திற்கு செல்லவே விரும்புவதாக தெரிகின்றது. கிழக்கு மாகாணத்தில் இந்த நிலைமை அதிகம். இதற்கு அங்குள்ள அரசியல் மற்றும் சமூக நிலைமைகளும் ஒரு காரண மாகும்.

கடந்த 14 வருடகால அரசியல் அனுபவங்களை தொகுத்து நோக்கினால், விடுதலைப் புலிகள் தொடர்பான அரசியல் கதைகள் பெரும்பாலும் யாழ் குடாநாட்டு விடயமாக சுருங்கி விட்டது. வடக்கு மாகாணத்தின் குறிப்பாக யாழ் குடாநாட்டை மற்றும் கிளிநொச்சியில் வாக்குகளை எதிர்பார்த்திருக்கும் அரசியல்வாதிகளே அவ்வப் போது விடுதலைப் புலிகளை உச்சரிப்பவர்களாக இருக்கின்றனர்.

அதிலும் குறிப்பாக தேர்தல் அரசியல் போட்டிக்கே இது அதிகம் பயன்படுத்தப்படுகின்றது. யாழ்ப்பாண அரசியல் உரையாடல்களை பொறுத்தவரையில் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களாக தங்களை காண்பித்துக் கொள்வதில் ஒரு போட்டி இடம் பெறுகின்றது. இந்த போட்டியில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் கை ஓங்கிவிடக் கூடாதென்று ஏனையவர்களும், ஏனையவர்களின் கை ஓங்கி விடக் கூடாதென்று கஜன் அணியினரும் செயற்படுகின்றனர். இதன் காரணமாகவே அவ்வபோது, நினைவேந்தல் சச்சரவுகள் இடம் பெறுகின்றன. ஆனால் இவ்வாறான அரசியலை தங்களின் வாக்குவங்கிக்கு தேவையில்லையென்று கருதும் அரசியல்வாதிகள் அமைதியாக இருக்கின்றனர். இவ்வாறான நினைவேந்தல் சண்டைகள், திலீபன் சண்டை, பூ பதி சண்டைகளுக்குள் அவர் ஈடுபடுவதில்லை. ஆனால் கடந்த 14 வருடகால நீதி கோரும் அரசியலை உற்று நோக்கினால், இவர்களால் எதனையுமே சாதிக்க முடியவில்லை. இத்தனை கட்சிகள், இத்தனை புலம்பெயர் அமைப்புக்கள், இவர்களுக்குகிடையில் யார் சரியானவர்கள் என்னும் போட்டிகள், எவையும் தாயகத்தில் வாழும் மக்களுக்கு நீதியை பெற்றுக் கொடுப் பதிலோ, அரசியல் தீர்வை அடைவதிலோ குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய தாக்கங்களை ஏற்படுத்தவில்லை.

அண்மையில் இந்தக் கேள்வியை ஒரு புலம்பெயர் செயற்பாட்டாளர், கஜேந்திர குமாரிடம் கேட்பதான ஒரு வீடியோ கிளிப் வெளியாகியிருந்தது. 13 வருடங்களாக எதை அடைய முடிந்தது என்று அந்த நபர் கேட்ட போது, அதற்கு கஜேந்திரகுமாரின் பதிலோ நீர் எந்த அமைப்பு? உண்மையில் அவரின் கேள்விக்கு கஜேந்திரகுமாரிடம் பதிலில்லை. கடந்த 14 வருடகால அரசியல் நகர்வுகளை உற்றுநோக்கினால், கஜேந்திரகுமார் அணியினரின் பிரதான அரசியல் செயற்பாடாக இருந்தது, இருப்பது, ஒன்று மட்டுமே. அதாவது, மற்றவர்களை குற்றம் சாட்டுவது, மற்றவர்களுக்கு இந்திய அடிவருடிகள் முகவர்களென்று பட்டம் கூட்டுவது.

2008, இறுதி மாவீரர் தின உரையிலும், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன், இந்திய பேரரசுடன் உறவுகளை ஏற்படுத்த விரும்புவதாக குறிப்பிட்டிருந்தார். 2006இல், விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியராக அறியப் பட்ட அன்ரன் பாலசிங்கம், இந்திய தொலைக்காட்சி ஒன்றிற்கு வழங்கிய நேர்காணல் தொடர்பில் முன்னை பத்திகளிலும் குறிப்பிட்டிருக்கின்றேன்.

அதாவது, விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் தொடர்பில் தாம் வருந்தி மன்னிப்பு கோருவதாக பாலசிங்கம் தெரிவித்திருந்தார். இதில் இந்திய படைகளுடன் சண்டையிட்டது, ராஜீவ்காந்தியின் கொலை தொடர்பிலும் பாலசிங்கம் குறிப்பிட்டிருந்தார். இந்தியாவை தவிர்த்து, தாண்டி பயணித்து, எதனையும் செய்ய முடியாதென்பதை தனது இறுதிக் காலத்தில் பிரபாகரன் உணர்ந்திருந்தார்.

பாலசிங்கத்திற்கு அந்த உணர்வு ஏற்கனவே இருந்தது. அதன் காரணமாகத் தான் முன்னரே மன்னிப்பும் கோரியாவது, இந்தியாவுடன் மீண்டும் உறவுகளை ஏற்படுத்துவதற்கும் அவர் முயற்சித்தார். இந்த பின்புலத்தில், இந்தியாவுடன் உறவுகளை ஏற்படுத்த வேண்டுமென்றும், அதனுடன் பணியாற்ற வேண்டும், அவர்களது ஆலோசனையை செவிமடுக்க வேண்டுமென்று கூறுபவர்கள் இந்திய அடிவருடிகள், இந்திய முகவர்கள் என்றால், இந்த விடயத்தின் முன்னோடி பாலசிங்கமும் பிரபாகரனுமல்லவா! அவர்களையும் அடிவருடிகள், முகவர்களென்று அழைப்பதற்கு கஜேந்திரகுமாரும் அவரது தொண்டர்களும் தயாரா? இதே போன்று கூட்டமைப்பின் செயற்பாடுகளை எடுத்து நோக்கினால், கூட்டமைப்பு இலங்கை அரசாங்கத்தின் மீது குற்றம் சாட்டுவதையே ஒரு பிரதான அரசியலாக முன்னெடுத்தது. சூழ்நிலைமைகளை புரிந்து கொண்டு, அரசியலை முன்னெடுப்பது தொடர்பில் சிந்திக்காமல், அரசாங்கத்தின் மீது குற்றம் சாட்டுவதன் மூலம் தனது தவறுகளை மூடி மறைக்க முற்பட்டது. அரசாங்கம் அதாவது, சிங்கள ஆட்சியாளர்கள் எதனையும் தாமாக செய்ய மாட்டார்கள், என்பது தானே இத்தீவின் சிங்கள அரசியல் வரலாறு. அவ்வாறான சிங்கள ஆட்சியாளர்களிடமிருந்து, அதிகாரத்தை பெறுவதற்கான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கும், அதற்கான இராஜதந்திர செயற்பாடுகளை முன்னெடுப்பதும் தானே தமிழ் அரசியல் இலக்கு. அரசாங்கத்தை குற்றம்சாட்டுவதற்கு எதற்கு ஒரு தனியான கட்சி?

14 வருடகால தமிழர் லொபி, எதிர்பார்த்த வெற்றியை தரவில்லை. தோல்விலேயே முடிந்திருக்கின்றது. இதற்கான காரணங்களை ஆராய வேண்டும். இதற்கு நான் முன்னர் குறிப்பிட்ட ஒரு விடயத்தைப் பற்றி அனைவரும் சிந்திக்க வேண்டும். அதாவது, கடந்த காலம் தொடர்பான பரிவுணர்விற்கும் அரசியலில் கடக்க வேண்டிய உண்மைகளுக்கும் இடையில் சிக்குப்படுத்தலிருந்து விடுபட வேண்டும். தமிழர் அரசியல் லொபியை விடுதலைப் புலி விசுவாசத்திலிருந்து வெளியில் எடுக்க வேண்டும். சாகசக் கதைகள் தமிழர்களுக்குரியதே தவிர, அது சர்வதேசத்துக்குரியதல்ல.

விடுதலைப் புலிகள் தொடர்பான மேற்குலகின் பார்வையில் எவ்வித மாற்றமும் இல்லை. மாற்றமும் ஏற்படாது. யுத்தம் முடிவுற்று, 14 வருடங்களின் பின்னரும், கூட விடுதலைப் புலிகள் மீதான பயங்கரவாத முத்திரை அப்படியே தொடர்கின்றது. மேற்குலகம் விடுதலைப் புலிகள் அமைப்பை எல்லை தாண்டிய பயங்கரவாத கண்ணோட்டத்திலேயே நோக்கி வருகின்றது.

இவ்வாறானதொரு பின்புலத்தில், தமிழர்களுக்கான நீதி கோரும் லொபியை முன்னெடுக்கும் புலம்பெயர் அமைப்புக்கள் தங்களை புலி விசுவாச வட்டத்திற்குள் அடையாளப்படுத்துவதானது, அவர்களது நகர்வுகளில் ஒரு போதும் முன்னேற்றத்தை ஏற்படுத்தாது. கடந்த 14 வருடகால, நீதிக்கான தமிழ் லொபியின் தோல்வியை இந்தக் கண்ணோட்டத்தில் நோக்குவதற்கு நாம் தயாராக வேண்டும். மேற்குலகத்தினால் பயங்கரவாத அமைப்பாக நோக்கப்படும் ஒரு அமைப்பின் விசுவாசிகளாக, மேற்குலகத்தை அணுகுவது, நம் மீதான பரிவுணர்வை ஏற்படுத்தாது.(22ம்பக்கம் பார்க்க)

EELANADU 19 May 2023 ஈழநாடு

# இடதுசாரிகளின் எதிர்ப்பு வாதமும் அமெரிக்கா - விக்கிரமசிங்க கூட்டு அரசியலும்?

கட்டுரையாளர்:
இலங்கையில் இருந்து
– K.T.கணேசலிங்கம் –



இலங்கை அரசியலில் மீண்டும் ஒரு காட்சி மாற்றத்திற்கான அரங்கத்தை தீவிர அரசியல்வாதிகள் ஆரம்பித்துள்ளனர். அதில் முன்னாள் இடதுசாரிகள் என்று கூறிக் கொள்பவர்களும் உள்ளடங்குவார்கள். இலங்கைத்தீவில் இடதுசாரிகளும் வலதுசாரிகளும் தாராளவாதிகளும் மதவாதிகளும் இனவாதிகளாகவும் தீவிர தமிழ் எதிர்ப்புவாதிகளாகவுமே காணப்படுகின்றனர். இன வாத உணர்வுக்கு முன் எந்த சித்தாந்தமும் செல்லுபடியாகாத நிலையே இன்று வரையும் காணப்படுகிறது. அரசியல்வாதிகளும் மதவாதிகளும் தீவிரவாதிகளாக மாறியதன் விளைவே இன்றைய இலங்கைத் தீவின் நிலையாகும்.

இக்கட்டுரையும் என்.எப்.எப். (NFF) தலைமையினதும் அக் கட்சியினதும் உரையாடலின் முக்கியத்துவத்தை தேடுவதாக உள்ளது. தென் இலங்கையில் ஏற்பட்ட அரசியல் பொருளாதார நெருக்கடியின் போது உதயமான தேசிய முற்போக்கு முன்னணியின் தலைமையும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல்வீரவன்ச இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் மீது முன் வைத்துள்ள குற்றச்சாட்டுக்களை முதல்ல் நோக்குவது பொருத்தமானதாக அமையும்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டபாய ராஜபகச் பதவியிலிருந்து அகற்றப்பட்டமைக்கு பின்னால் அமெரிக்கா செயல்பட்டதாக குற்றம் சாட்டியுள்ளார். அதற்கான தந்திரோபாயங்களையும் பாராளுமன்றத்தை நோக்கிய அமெரிக்காவின் நகர்வுகளையும் தெளிவாக தனது 133 பக்கம் கொண்ட நூல் ஒன்றில் விலாவாரியாக விமர்சனம் செய்துள்ளார்.

அதனை 24 மணி நேரத்தில் ஆங்கிலத்தில் அமெரிக்கத்தூதுவர் மொழி பெயர்த்து எதிர்வினையாற்றியுள்ளதாக தென் இலங்கை ஊடகங்கள் தெரிவித்துள்ளன. அதில் அமெரிக்காவின் நகர்வுகள் இலங்கை அரசியல் பரப்பில் மேற்கொள்ளப்பட்ட தந்திரோபாயங்கள் ஜனாதிபதி அலுவலகத்திற்குள்ளும் வெளியுறவு அமைச்சிலும் தனிப்பட்ட செயலாளர்கள் நிலையிலும் ஏற்பட்ட பதவி நிலை மாற்றங்களும் அதிகாரக் கட்டமைப்பில் ஏற்பட்ட மாற்றங்களும் உரையாடப்பட்டுள்ளது.

இராணுவத்தளபதியின் நகர்வுகள் எப்படி கையாளப்பட்டதென்பதும் பொதுஜனப் பெரமுனவுக்குள் ஏற்பட்ட குழப்பங்கள் உட்பட ஆட்சி மாற்றத்தின் பின்னணி விபரணப்படுத்தப்படுகிறது. அத்தகைய நிலையிலேயே தேசியப்பட்டியல் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினரும் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க பிரதமரானதும் அதனை அடுத்து அவர் ஜனாதிபதி ஆனதற்கும் பின்னால் அமெரிக்க நகர்வுகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

இத்தகைய விடயம் இதே பரப்பில் பல தடவை உரையாடப்பட்டுள்ளது. இதுவொன்றும் தமிழ்வாசகர்களுக்கு புதியது கிடையாது. ஆனால் அவர்களால் இத்கைய வல்லரசு நாடுகளது தலையீட்டுக்கு அடிப்படைக் காரணங்களை கண்டறிந்து அது தீர்க்கப்படாத வரை வல்லரசுகளது தலையீடு மட்டுமல்ல தென் இலங்கையின் அரசியல் பொருளாதாரத்திற்காக உலகத்தை நோக்கி கையேந்த வேண்டிய நிலை தவிர்க்க முடியாததாகும்.

இது தென் இலங்கையிலுள்ள இடதுசாரிகள் என தம்மைக் கூறிக் கொள்ளும் அரசியல் கட்சிகளுக்கும் அதன் உறுப்பினர்களுக்கும் பொருந்தும். காரணம் அவர்களே ஏகாதிபத்தியம் பற்றியும் முதலாளித்துவம் பற்றியும் அதிகம் உரையாடுபவர்கள். இலங்கையின் இனப் பிரச்சினைக்கு தீர்வு முன் வைக்காது இனவாதம் பேசும் தரப்பாகவே தென் இலங்கை சிங்கள இடதுசாரி அரசியல் காணப்படுகிறது. சிறிய அளவில் முற்போக்குச் சக்திகள் காணப்பட்டாலும் அவர்களால் தனித்தோ கூட்டாகவோ தீர்மானம் எடுக்கும் வலிமை இல்லாதுள்ளமை ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய விடயமாகவே உள்ளது. ஆனால் இத்தகைய எதிர்புவாதத்தை கட்டியெழுப்புவதன் வாயிலாக மாற்றத்தை நோக்கிய நகர்வு திட்டமிடப்படுகிறதா என்ற கேள்வி எழுந்துள்ளது.

முதலாவது, இந்திய-அமெரிக்க எதிர்ப்பு வாதம் என்பது இலங்கைத் தேசியத்தின் அடிப்படையென்பது வரலாற்று ரீதியில் நிகழ்ந்து வரும் விடயமாகும். அத்தகைய எதிர்புவாதம் சிங்கள் தேசியவாதத்தை தூண்டி விட அவசியமானது. அதுவே மகாவம்சம் முதல் இன்றுவரை நிகழ்ந்துவரும் தென் இலங்கை அரசியலாகும். அத்தகைய எதிர்ப்பு வாதத்தினால் ஈழத்தமிழர் விரோதிக்கப்படுகிறார்கள். இந்தியாவும் அமெரிக்காவும் ஈழத் தமிழருக்கு அதிகாரம் பெற்றுத் தர முனைவதாகவே பொய்யான பிரச்சாரத்தை முன் வைத்து வருகின்றனர்.

குறைந்தபட்சம் விடுதலைப்புலிகளை மீளவும் பலப்படுத்த முயல்வதாக பிரச்சாரம் செய்யும் தன்மையை தென் இலங்கை அரசியல்வாதிகள் கொண்டிருப்பார்கள். இவற்றின் வாயிலாக சிங்களத் தேசியத்தை மீழெளச் செய்வதற்கான முயற்சியாகவே தெரிகிறது. அரகலய அமெரிக்க மற்றும் மேற்குலகத்தின் நிகழ்ச்சி நிரலால் தூண்டப் பெற்றதென்றால் சிங்களத்தேசியம் இடதுசாரி முலாம் பூசிக் கொண்ட தீவிர அரசியல்வாதிகளால் தூண்டப்படுவதாகவே புரிந்து கொள்ளப்பட வேண்டும். இடதுசாரிகளிடம் உள்ள ஏகாதிபத்திய எதிர்ப்பு முதலாளித்துவ எதிர்ப்பு எனும் சுலோகங்களை முன்னிறுத்திக் கொண்டு தென் இலங்கை இடதுசாரிகள் சிங்களத் தேசியவாதத்தை போலியாக பலப்படுத்துகிறார்கள்.

இத்தகைய இடதுசாரிகள் எவரும் ஈழத் தமிழரை ஒரு தேசிய இனமாக என்றுமே ஏற்றுக் கொள்ளவில்லை என்பது கவனிக்கப்பட வேண்டிய விடயமாகும். இடதுசாரிகளின் ஆழமானதும் முதன்மையானதும் பிரச்சினைக்கான தேசிய இனம் பற்றிய தீர்வு பற்றிய சிந்தனையேயாகும். தேசிய இனப்பிரச்சினைக்கு சுய நிர்ணயம் மற்றும் சமஷ்டி பற்றிய உரையாடலை முதலாளித்துவம் முன் வைத்தாலும் அதனை உலகளாவிய நியதிக்குள் கொண்டு வந்ததும் நடைமுறைப்படுத்தியதும் இடதுசாரிகளே.

அத்தகைய இடதுசாரிகளின் கோட்பாட்டிலிருந்தே தென் இலங்கை இடதுசாரிகள் பார்க்கப்படுகிறார்கள். ஆனால் அவர்கள் என்றுமே இனவாதிகளாகவே துலங்கியுள்ளனர். தென்இலங்கை இடதுசாரிகள் ஏகாதிபத்தியத்தின் சோற்றை உறுஞ்சிக் கொண்டு ஏகாதிபத்தியத்திற்கு எதிராக போராடுகிறார்கள் என்றே அடையாளப் படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இரண்டு, தற்போதுள்ள ஆட்சியும் ஜனாதிபதியும் அமெரிக்க நலனுக்கு செயல்படுபவர்களாவே காட்டப்படுகிறது. அதில் நியாயம் உண்டு. பாராளுமன்றத்தில் ஓர் ஆசனத்தைக் கொண்ட ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி ஆவதென்பது இலகுவான விடயமாகாது. அது ஒரு தேசத்தின் பலத்தினால் என்பதையும் மறுக்க முடியாது. விக்கிரமசிங்க ஓர் உயர்வர்க்கம் என்பதனால் சாத்தியமானாலும் அதனைக் கடந்து அவர் ஒரு தராளரான ஜனநாயகவாதியாகவும் மேற்குலக விசுவாசியாகவும் காணப்பட்டதே அத்தகைய ஜனாதிபதி பதவியை இலகுவில் கைப்பற்றவும் அதனைத் தக்க வைக்கவும் முடிந்தது. தற்போது அதனை நீடிப்பதற்கு முனைகிறார். அதற்கு மேற்குலகத்தின் ஆதரவு அவசியமானது. மேற்குலகத்தின் இலங்கை பொறுத்த நிகழ்ச்சி நிரல் என்பது இந்துசமுத்திர நிகழ்ச்சி நிரலுமாகும். இதுவே தற்போதுள்ள எதிர் முரணுமாகும். அதாவது வெதமுல்ல அரசியலுக்கு ஜனாதிபதி விக்கிரமசிங்க தேவையாக உள்ளார். அதே நேரம் அவரது அமெரிக்க விசுவாசத்தின் அளவு மட்டுப் படுத்தப்பட வேண்டும் என மெதமுலான அரசியல் கருதுகிறது. அதனால் வெதமுல்ல அரசியலின் எதிர்காலம் காணாமல் போய் விடும் என எண்ணுகிறது. ஆனால் விக்கிரமசிங்க இல்லாவிட்டால் வெதமுல்ல இருப்பு காணாமல் போய் விடும் என்பதை நிராகரிக்க முடியாது.

இதனையே விக்கிரமசிங்கவும் பயன்படுத்தி வருகிறார். அதாவது மெதமுலானவின் ஆதரவுடன் மக்களால் தேர்வு செய்யப்படும் ஜனாதிபதியாக ஆட்சியில் அமர்வதே அவரது நோக்கமாகும். அத்தகைய எதிர்காலம் விக்கிரமசிங்கவுக்கு மட்டுமல்ல அமெரிக்காவின் இந்து சமுத்திர அரசியலுக்குமானது.

இந்து சமுத்திரத்தில் சீனாவின் பலத்தை உடைத்து மேற்குலகத்தின் பலத்தை உறுதிப்படுத்தும் நோக்குடன் நகரும் அமெரிக்காவும் விக்கிரமசிங்கவும் காணப்பட விக்கிரமசிங்கவை தோற்கடிப்பதன் மூலம் அமெரிக்காவை அகற்றி மெதமுலானவை மீளவும் ஆட்சியில் அமரச் செய்து சீனாவின் இருப்பினைப் பாதுகாப்பதே வீரவன்ச அணியின் திட்டமிடலாக தெரிகிறது.

அதில் அதிக முரண்பாடுடையவராக விக்கிரமசிங்கவும் இல்லை என்பதை புரிந்து கொள்ளுதல் வேண்டும். அதாவது இந்தியாவை இலங்கைத் தீவின் அரசியலில் தலையிடாது இருக்க செய்ய வேண்டுமாயின் சீனாவுடனான உறவு இலங்கைத்தீவுக்கு அவசியமென விக்கிரமசிங்க கருதாமலுமில்லை. ஆனால் இதனை இடதுசாரி அணி ஏற்றுக் கொள்ளவதாக இல்லை. அதனை நம்பவும் தயாரில்லை. அதனாலேயே அமெரிக்காவையும் விக்கிரமசிங்கவையும் சிங்களத் தேசியத்தின் பெயரால் அகற்ற முயலுவதாகவே தெரிகிறது. அதற்கான தயாரிப்புக்கள் தென் இலங்கையில் அரங்கேற ஆரம்பித்துள்ளது.

மூன்றாவது, இது எத்தகைய பிரதிபலிப்பை ஈழத்தமிழரது அரசியலில் ஏற்படுத்தும் என்பது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயமாகும். இத்தகைய அமெரிக்க விக்கிரமசிங்க நிகழ்ச்சி நிரலுக்குள்ளேயே தமிழ் அரசியல்வாதிகளுடனான பேச்சு மேசை கட்டமைக்கப்படுகிறது. அதன் உள்ளார்ந்த நோக்கம் தமிழ் மக்களது வாக்குப் பற்றியதாகும். ஜனாதிபதி தேர்தலில் தமிழ் மக்கள் வாக்கு விக்கிரமசிங்கவுக்கு தேவையாக உள்ளது. தென் இலங்கையில் ஏற்பட்டுள்ள நெருக்கடியை ஓரளவாவது சமாளித்துக் கொள்ள தமிழ் மக்களது வாக்கு தேவையாக உள்ளது. அதற்கான நகர்வாகவே பேச்சுவார்த்தைக்கான அழைப்பு அமைந்துள்ளது.



பேச்சுவார்த்தை என்பது ஓர் இராஜதந்திர செய்முறை என்பதை புரிந்து கொள்ள வேண்டும். பேச்சுக்களுக்கு போகாது பகிஸ்கரிப்பது, வெறுமையாக எந்த தயாரிப்புமின்றி நிபந்தனையும் இன்றி பேசப் போவதும் தமிழ் தரப்பின் பலவீனமே, அது பற்றி உரையாடுவதில் எந்த பயனும் இல்லை. ஆனால் இந்த தென் இலங்கை மற்றும் இந்துசமுத்திர அரசியல் சூழலில் தமிழ் அரசியல் தனது நியாயமான அடிப்படைகளை வென்றெடுக்க வாய்ப்புள்ளது. ஆனால் அதற்கான எந்த தயாரிப்பும் இன்றி அவர்களது வெளிப்பாடுகள் வழமையானதாக உள்ளது.

எந்த புரட்சிகரமான அணுகுமுறையுமின்றி நகரும் பாதையில் தமிழ் அரசியல் பயணிக்கிறது. இத்தகைய வங்குரோத்து அரசியலாலேயே எதனையும் அடைய முடியாது. புதிய அரசியல் அணி புரட்சிகரமான அணுகுமுறையும் உபாயம் கொண்ட திட்டமிடலுடன் எழுச்சியடைய வேண்டும்.

எனவே தென் இலங்கை இடதுசாரிகளது அமெரிக்க இந்திய எதிர்ப்புவாதம் உள்நாட்டில் வெதமுல்ல அரசியலை நிலை நிறுத்துவதாக உள்ளது. அவ்வகை நிலைநிறுத்தலானது இந்துசமுத்திரத்தில் சீனாவின் பலத்தை வலுவடையச் செய்வதுடன் விக்கிரமசிங்கவையும் அமெரிக்காவையும் சிங்களத் தேசியத்தின் பெயரால் தோற்கடிப்பதாகும். இதில் தமிழர் தரப்பு பலியிடப்படுவதற்கான தயாரிப்பாகவே பேச்சுவார்த்தை என்ற அரங்கு காணப்படுகிறது. அமெரிக்க விக்கிரமசிங்கத் தரப்பால் அணைத்து கெடுக்கவும் மெதமுலான வீரவன்ச சீன தரப்பால் இனவிரோதத்தால் நிராகரிக்கப் படவும் வாய்ப்பு அதிகமாகும்.

# இது யுக புராணம் பாடும் காலமல்ல!



இது முள்ளிவாய்க்காலை நினைவுகூரும் 14ஆவது வருடம். முள்ளிவாய்க்காலை நினைவு கொள்வது, யுத்தத்துக்குள் அகப்பட்டு மரணித்த மக்களின் உறவுகளுக்கு உணர்வுர்வமான நாட்கள்.

யுத்தத்துக்குள் அகப்பட்டு தப்பித்துக் கொண்ட மக்களுக்கோ தாங்கள் பிழைத்துக் கொள்வதற்காக அலைந்த நாட்களின் நினைவுகளை மீட்டுக்கொள்ளும் நாட்கள்.

ஆனால், அரசியல் சமூகத்தினருக்கும் புத்திபூர்வமான சமூகம் ஒன்றுக்கும் இது வெறும் உணர்வுபூர்வமான விடயம் மட்டுமல்ல, விடயங்களை அறிவு ரீதியாக எண்ணிப் பார்ப்பதற்கான நாட்களாகும்.

யுத்தத்தில் ஈடுபட்ட இரண்டு தரப்புகளுமே யுத்தத்தின் மீதான பிடியை தாங்கள் இழந்து விடக்கூடாதென்னும் இலக்கிலேயே இறுதிவரையில் செயல்பட்டனர். இது யுத்தத்தின் போதான பொதுப் போக்குத்தான். ஆனால் இரண்டு தரப்புகளுமே வெற்றிக்கான யுத்தத்தை தெரிவுசெய்யும்போது, யுத்தத்தை நிறுத்தும் முயற்சிகள் அனைத்தும் தோல்வியடைந்தன.

உலகத்தை பொறுத்த வரையில் இலங்கை அரசாங்கம் பயங்கரவாதத்துக்கு எதிரான யுத்தத்தை புரிகின்றது. அது ஓர் இறைமையுள்ள நாட்டின் விவகாரம். அதற்குள் நாம் தலையிட முடியாது.

பலம்பொருந்திய நாடுகள் யுத்தங்களுக்குள் சிக்குண்டு போகும் சிறிய நாடுகளை இவ்வாறுதான் சாதாரணமாகக் கைகழுவிச் சென்றுவிடுகின்றன.

ஆப்கானிஸ்தானில் 20 வருடங்கள் நிலைகொண்டிருந்த அமெரிக்க படைகள் எந்த தலிபான்களை ஆப்கானிஸ்தானிலிருந்து வெளியேற்றியதோ அதே தலிபான்களிடம் நாட்டை விட்டுவிட்டு வெளியேறி விட்டன.

அந்த சந்தர்ப்பத்தில் ஓர் ஊடகவியலாளர் அமெரிக்க ஜனாதிபதி பைடனிடம் கேட்கின்றார் ஆப்கானிஸ்தான் மக்களை கைவிட்டு விட்டீர்களே அதற்கு பைடனின் பதில் ஆப்கானியர்களுக்கே ஆப்கானிஸ்தானில் அக்கறையில்லா விட்டால் நாங்கள் என்ன செய்ய முடியும்? அவர்களுக்காக அமெரிக்க படைகள் செத்துக் கொண்டிருக்க முடியாது. இதுதான் பலம்பொருந்திய சக்திகளின் பதில்.

இதில், நாம் அதிர்ச்சியடைய ஒன்றுமில்லை. இதிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டும்.

மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் வன்னியிலிருந்து ஐக்கிய நாடுகள் சபையின் அதிகாரிகளையும் அங்கிருந்த அரசுசாரா நிறுவனங்களையும் வெளியேறுமாறு கூறியதைத் தொடர்ந்து அனைவரும் உடனடியாக வெளியேறி விட்டனர்.

அங்குள்ள மக்கள் தொடர்பில் எவரும் அக்கறை காண்பிக்கவில்லை — அவர்களால் காண்பிக்கவும் முடியாது.

ஏனெனில், ஓர் அரசாங்கம் உங்களின் உயிருக்கு உத்தரவாதமில்லை என்றால் அதன் பின்னர் எவரும் யுத்த வலயத்துக்குள் இருக்க முடியாது. இதுதான் யதார்த்தம்.

இந்தப் பின்னணியில் தான் வெற்றிக்கான சண்டையில் இலங்கை இராணுவம் இறுதியில் அவர்களுக்கான வெற்றியை ஈட்டியது.

இறுதி யுத்தத்தின் போது, வெற்றிக்காகப் போரிட்ட இரண்டு தரப்புகளும் எவ்வாறு செயலாற்றின என்பது தொடர்பில், அந்த சமயம் ஐக்கிய நாடுகள் சபையின் பேச்சாளராக இருந்த கோடன் வைஸ் இறுதி யுத்த அனுபவங்களை தொகுத்து, 'கூண்டு' என்னும் தலைப்பில் நூலொன்றை வெளியிட்டிருக்கின்றார்.

அதில், இரண்டு தரப்புகளின் குற்றங்கள் தொடர்பிலும் பேசியிருக்கின்றார் இரண்டு தரப்புகளுமே எவ்வாறு மக்களை காப்பாற்றுவதில் அக்கறையற்றிருந்தனர் என்பதைப் பற்றி பேசியிருக்கின்றார்.

பின்னர் கோடன் வைஸ் அமெரிக்காவின் புகழ்பெற்ற வெளிவிவகார சஞ்சிகையான, 'பொறின்பொலிசி'யில் 'புலிகளின் இரத்தம்' என்னும் தலைப்பில் ஒரு கட்டுரையை எழுதினார் அதில், 'புலிகள் இல்லாத உலகம் முன்னரை விடவும் சிறப்பாக இருக்கின்றது', என்று எழுதினார்.

இன்று, 14 வருடங்கள் கழித்து நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் முள்ளிவாய்க்கால் நிகழ்வில் அவர் பேருரை ஆற்றினார்.

நாடுகடந்த அரசாங்கம் மாற்றங்களை புரிந்து கொண்டு விட்டதா? அறிவின் துணையுடன் உலகை புரிந்து கொள்ள வேண்டுமென்று எண்ணும் முயற்சிக்கும் தமிழ் சமூகத்தின் முன்னேறிய பிரிவினருக்கு இந்த நாட்கள் ஒருபோதும் யுக புராணம் பாடும் அல்லது கவிதைகள் எழுதி மனதைத் தேற்றும் நாட்களல்ல.

நாம் எங்கு வீழ்ந்து போனோம்? ஏன் வீழ்ந்து போனோம்? ஏன் நம்மை யாரும் ஏறெடுத்தும் பார்க்கவில்லை? இந்த 14 வருடங்களில் ஏன் நமது முயற்சிகள் எவையுமே குறிப்பிட்டு சொல்லக்கூடிய வெற்றியை பெறமுடியவில்லை? உண்மையில், நமது அரசியல் எங்கு சிக்குண்டு போயிருக்கின்றது? இவ்வாறான கேள்விகளின் வழியாக கடந்த காலத்திலிருந்து கற்றுக் கொள்வது பற்றியே சிந்திக்க வேண்டும்.


House for sale
In Beavarton town



35 minutes from Ajax
4 bedrooms 2 baths - $ 699,000
3 years rental grantee $ 2,800
Basment can rented fr $ 1,400

Need $ 35,000 to finish (3bedroom)

Call 416-518-5959



சிவமயம்



ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை

சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)

ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# சர்வதேச சந்தையில் யாழ்ப்பாணக் கதலி!

தமிழர்களைப் பொறுத்தவரையில் முக்கனிகள் என்பது அவர்களுடைய உணவில் முக்கியமானது. இந்த முக்கனிகளுக்கும் பெயர் போன இடமாக இருப்பது யாழ்ப்பாணம். முக்கனிகளில் வாழைப்பழத்துக்கு சீசன் என்று ஒன்று இல்லை. எந்தக் காலத்திலும் வாழைப் பழம் யாழ்ப்பாணச் சந்தைகளில் நிறைந்து கிடக்கும். மாம்பழம், பலாப்பழத்துக்கு சீசன் இருக்கின்றது. இப்போது மா, பலா சீசன் யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகி விட்டது. மூன்று மாதங்களுக்கு மேல் இது தொடரும்.

ஆனால், எந்தக் காலத்திலும் பலன்தரும் வாழைப்பழம் யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் பிரதான உற்பத்திகளில் ஒன்று. கோப்பாய், நீர்வேலி, உரும்பிராய், அச்சுவேலி உட்பட்ட பல பகுதிகள் வாழைச்செய்கைக்கு பெயர் போனவை. கொழும்பில் யாழ்ப்பாணத்து இதரை, கப்பல், கதலி வாழைப்பழங்களுக்கு தனியான ஒரு கிராக்கி உள்ளது. தினசரி பெருமளவு குலைகள் தென்பகுதியை நோக்கி யாழ்ப்பாணத்திலிருந்து அனுப்பப்படுகின்றது.

யாழ்ப்பாண மக்களைப் பொறுத்தவரையில் கடந்த வாரம் முக்கியமான ஒரு வாரம். அவர்களுடைய நீண்ட கால கனவு நனவாகியிருக்கின்றது. யாழ்ப்பாணத்தில் செய்கை பண்ணப்படும் வாழைப்பழம் சுத்திகரிக்கப்பட்டு, பதப்படுத்தப்பட்டு சீப்பு - சீப்பாக வெட்டப்பட்டு, பெட்டிகளில் மொதி செய்யப்பட்டு டுபாய்க்கு ஏற்றுமதியாகத் தொடங்கியுள்ளது. புளி வாழை. என்று சொல்லப்படும் யாழ்ப்பாண கதலி வாழைப்பழம் முதல் முறையாக சர்வவதேச சந்தைக்குச் சென்றிருக்கின்றது.

தென்னிலங்கை வரை பிரபலமான யாழ்ப்பாண வாழைப்பழம் இப்போது சர்வதேச சந்தையிலும் பிரசித்தமாகி விட்டது என்பது யாழ்ப்பாண மக்களுக்கு உற்சாகமளிக்கும் ஒரு செய்தி. யாழ்ப்பாண கதலி வாழைப்பழத்தை இந்த வாரத்திலிருந்து டுபாய் கடைகளில் வாங்க முடியும் என்பது யாழ்ப்பாண வாழைச் செய்கையாளர்களுக்கு நம்பிக்கையளிக்கும் ஒரு வெற்றிச் செய்தி.



நவீன விவசாய மயமாக்கல் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணத்தில் இருந்து டுபாய்க்கு வாழைப்பழங்களை ஏற்றுமதி செய்யும் திட்டம் கடந்த மே 3 ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டது. யாழ்ப்பாணம் நிலாவரைசந்தியில் அமைக்கப்பட்டுள்ள வாழைக்குலை பதப்படுத்தல் நிலையத்தில் இந்த நிகழ்வு நடைபெற்றது. யாழ்ப்பாண அரசாங்க அதிபர் அம்பலவாணர் சிவபாலசுந்தரம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், நவீன விவசாய மயமாக்கல் திட்டத்தின் பணிப்பாளர், விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

கோப்பாய், உடுவில், தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளிடமிருந்து பெறப்பட்ட வாழைக்குலைகளே இவ்வாறு ஏற்றுமதி செய்யப்படவுள்ளன. கோப்பாய், நீர்வேலி, உரும்பிராய், தெல்லிப்பளை போன்ற பகுதிகள் வாழைச் செய்கைக்கு பெயர் போனவை. கொள்முதல் செய்யப்படும் கதலி வாழைக் குலைகள் நிலாவரையில் உள்ள வாழைக்குலை பதப்படுத்தும் நிலையத்தில் பதப்படுத்தப்பட்டு, பெட்டிகளில் அடைக்கப்பட்டு அங்கிருந்து நேரடியாக கொழும்பு துறைமுகத்திற்கு கொண்டு செல்லப்பட்டு டுபாய்க்கு கப்பல் மூலமாக ஏற்றுமதி செய்யப்படுகின்றது.

இந்த திட்டத்தின் முதற் கட்டமாக 10,000 கிலோகிராம் வாழைப்பழத்தை வாரந்தோறும் ஏற்றுமதி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது முதலாவது கட்டம். இதன் அடுத்த கட்டமாக ஏற்றுமதித் தொகை அதிகரிக்கப்படலாம்.

முதலாவது கட்டம் எந்தளவுக்கு சிறப்பாக வெற்றிகரமாக முன்னெடுக்கப் படுகின்றது அதற்கான வரவேற்பு எவ்வாறுள்ளது என்பதைப் பொறுத்து அடுத்த கட்டங்கள் அமையும் என எதிர்பார்க்கலாம். டுபாய் தவிர்ந்த வேறு சில நாடுகளிலும் வாழைப்பழங்களுக்கான சந்தை வாய்ப்புள்ளது.

வாராந்தம் பத்தாயிரம் கிலோவை வழங்குவது என்பது யாழ்ப்பாண வாழைக் குலைச் செய்கையாளர்களைப் பொறுத்தவரையில் கடினமான ஒரு பணியல்ல. வெளிநாட்டு சந்தை வாய்ப்பின் மூலமாக அதிக வருவாய் கிடைக்கின்றது என்பதால் அவர்கள் அதிகளவு உற்சாகத்துடனும் ஈடுபாட்டுடன் உற்பத்தி செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான வாய்ப்புக்களும் இருக்கின்றன. இதனால் உற்பத்தியின் அளவும், தரமும் அதிகரிப்பதற்கான வாய்ப்புக்களும் உள்ளன.

இந்த ஏற்றுமதித் திட்டத்தின் முக்கியமான அம்சங்களில் ஒன்று - இது நூறு வீதம் இயற்கை விவசாய முறையில் செய்யப்படுகின்றது. இரசாயண உரங்கள் எதுவும் பயன்படுத்தப்படாமல் செய்கை பண்ணப்பட்ட வாழைப்பழங்கள் மட்டுமே ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

இந்த ஏற்றுமதித் திட்டம் தொடர்பாக யாழ்ப்பாண அரசாங்க அதிபர் அம்பலவாணர் சிவபாலசுந்தரத்திடம் கருத்துக் கேட்டபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

விவசாய உற்பத்திகளை நவீன மயமாக்குவதன் மூலமாக பெருக்கிக் கொள்வதும், அவற்றுக்கு பெறுமதி சேர்ப்பதும் அவற்றை உலக சந்தைக்கு அறிமுகப்படுத்துவதும் ஒரு முக்கியமான செயற்பாடாகும். வடமாகாணத்தில் விவசாய நவீனமயமாக்கல் திட்டம் நீண்டகாலமாகச் செயற்படுத்தப்பட்டு வந்தாலும், இப்போது தான் அது முக்கியமான மைல் கல்லை எட்டியிருக்கின்றது. (2ம் பக்கம் பார்க்க)

RG Education Centers
Established in 1991
ஆர். ஜி. கல்வி நிலையம்
PAR EXCELLENCE

பாலர் வகுப்பு முதல் உயர்நிலை வகுப்புகள் வரை
அத்தியாவசிய கல்வித் தேவைகளுக்கு

3852 FINCH AVE EAST, SUITE 401
(One Block West of Kennedy)
Scarborough

தகவல் பெற உங்கள் பெயர், தொடர்பு இலக்கம் பதிவு செய்ய
416-609-9508 அல்லது 416-396-3224
email: info@rgeducation.com
மேலதிக விபரங்கட்கு www.rgeducation.com

# பதற்றத்தை அதிகரிக்கும் சீனா

நான்கு நாட்கள் பயணமாக இந்திய விமானப் எயர் சீவ் மார்ஷல் விகே சௌத்ரி கடந்த முதலாம் திகதி இலங்கையில் காலடி வைக்கும் போது, சீனாவின் உயர்மட்ட குழுவொன்று கொழும்பில் தங்கியிருந்தது. சீன அரசு நிறுவனமான, சைனா மேர்ச்சன்ட் குழுமத்தின் தலைவர் மியாவோ ஜியான்மின் (Miao Jianmin) தலைமையிலான குழுவே இது.

2008ஆம் ஆண்டு அம்பாந்தோட்டை துறைமுகத்தை அமைக்கும் திட்டத்தின் ஊடாக, இலங்கையில் காலடி எடுத்து வைத்த இந்த சீன அரசுத் துறை நிறுவனம், இப்போது அம்பாந்தோட்டை துறைமுகத்தை 99 வருட குத்தகைக்குப் பெற்றிருக்கிறது.

எனினும், சைனா மேர்ச்சன்ட் குழுமத்தின் தலைவர் மியாவோ ஜியான்மின் இலங்கைக்கு பயணம் மேற் கொண்டிருப்பது இது தான் முதல் முறை. இந்த ஆண்டுத் தொடக்கம் வரையில், இலங்கையில் சைனா மேர்ச்சன்ட் குழுமம், செய்திருக்கின்ற முதலீடு, 1.68 பில்லியன் டொலர்களாகும். இவ்வாறான நிலையில், அந்த நிறுவனத்தின் தலைவர் மியாவோ ஜியான்மின் இலங்கைக்கு வருகை தந்ததன் நோக்கம், சுமார் 2 பில்லியன் டொலர்கள் முதலீட்டை மேற்கொள்வது தான். அதன் ஒரு கட்டமாக கொழும்பு துறைமுகத்தில், 400 மில்லியன் டொலர் முதலீட்டில் விநியோக மையம் ஒன்றை அமைக்க இந்த நிறுவனம் முன்வந்திருக்கிறது.

பொருளாதார நெருக்கடிக்குப் பின்னர், இலங்கைக்கு கிடைத்திருக்கின்ற மிகப் பெரிய முதலாவது, நேரடி வெளிநாட்டு முதலீடு இதுவாகும். 2025 ஆம் ஆண்டில், இந்த விநியோக கேந்திர திட்டம், நிறைவடையும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இது தெற்காசியாவின் மிகப்பெரிய விநியோக கேந்திரமாக இருக்கும் என்றும், சைனா மேர்ச்சன்ட் குழுமம் தெரிவித்திருக்கிறது. கிழக்கே, சிங்கப்பூருக்கும், மேற்கே டுபாய்க்கும் இடையில், முக்கியமான போக்குவரத்து கேந்திரமாக விளங்கும் கொழும்பு துறைமுகத்தில், அமைக்கப்படும் இந்த விநியோக கேந்திரத்தில், சைனா மேர்ச்சன்ட் குழுமம் 70 சதவீதம், உரிமையைக் கொண்டிருக்கும். அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இலங்கையை, இந்தியப் பெருங்கடலின் முக்கியமான கடல் மற்றும் வான் வழி போக்குவரத்து கேந்திரமாக மாற்றவுள்ளதாக கூறியிருந்தார்.

அதன் ஒரு கட்டமாகத் தான், கொழும்புத் துறைமுகத்தில், சைனா மேர்ச்சன்ட் குழுமம் முதலீடு செய்யவிருக்கிறது. அம்பாந்தோட்டை துறைமுகத்தை அடுத்து, கொழும்பு துறைமுகத்தில், ஆதிக்கம் செலுத்துவதற்கு, சைனா மேர்ச்சன்ட் குழுமம் முற்படுகிறது. ஏற்கனவே கொழும்பு துறைமுகத்தின் தெற்கு கொள்கலன் முனையத்தை 35 ஆண்டுகள் நிர்வகிக்கும் உரிமையை இந்த நிறுவனம், கொண்டிருக்கிறது.

கொழும்பு கிழக்கு கொள்கலன் முனையத்தை இந்தியாவின் உதவியுடன் அபிவிருத்தி செய்வதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில், அது தடுக்கப்பட்டது. அதன் பின்னணியில் சீனா இருந்தது என்ற குற்றச்சாட்டுகளும் முன் வைக்கப்பட்டன. அதனை அடுத்து, இந்திய இலங்கை உறவுகள் கசப்பான நிலையை அடைந்ததுடன் பொருளாதார நெருக்கடிகளால், இலங்கை மீண்டும் இந்தியாவிடம் சரணடையும் நிலை ஏற்பட்டது.

இதன் போது தான், கொழும்பு மேற்கு கொள்கலன் முனையம், இந்தியாவின் அதானி குழுமத்துக்கு வழங்கப்பட்டது. இப்போது, சைனா மேர்ச்சன்ட் குழுமம் கொழும்பு துறைமுகத்தின் விநியோக கேந்திரத்தில் பாரிய முதலீட்டை செய்ய முனைந்திருக்கிறது. சீனா தனது ஆதிக்கத்தை சர்வதேச அளவில் விரிவுபடுத்துவதற்கு, பல தந்திரங்களைக் கையாளுகிறது. துறைமுகங்கள், மற்றும் முக்கியமான திட்டங்களில் பெரியளவில் முதலீடுகளைச் செய்வது, நாடுகளுக்கு கடன்களை வழங்குவது, கடற்படையை



பெரியளவில் விரிவாக்குவது ஆகிய மூன்று தந்திரங்களும் முக்கியமானவை. பெரியளவில் முதலீடுகளைச் செய்வதன் மூலம், ஒரு நாட்டின் பொருளாதாரத்தை தீர்மானிக்கும் நிலையை அடையலாம். அது தங்களுக்கு வசதியான ஆட்சியாளர்களை உருவாக்கவும், தங்களுடன் ஒத்துழைக்காத ஆட்சியாளர்களை அகற்றவும், உதவியாக இருக்கும்.

பெருமளவில் கடன்களை வழங்கி, அதனைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலையை அடையும் நாடுகளின் துறைமுகங்கள், கேந்திர நிலைகளில் தனது தளங்களை அமைக்கும் நடவடிக்கைகளையும் சீனா முன்னெடுக்கிறது. இந்த இரண்டு உத்திகளுக்கும் பலிக்கடா ஆகிய நாடுகளில் ஒன்று இலங்கை

இலங்கையில் பாரிய முதலீட்டைச் செய்துள்ள சீனா, இங்குள்ள ஆட்சியாளர்களைத் தீர்மானிக்கும் செயற்பாடுகளையும் முன்னெடுத்திருக்கிறது. அது போல, கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலையில், அம்பாந்தோட்டை துறைமுகத்தை 99 வருட குத்தகை அடிப்படையில் கைப்பற்றியிருக்கிறது. ஜிபுட்டியில் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலையில் அங்கு சீனா கடற்படைத் தளத்தை அமைத்துக் கொண்டது.

இப்போது, தென்னாபிரிக்காவிலும், சொலமன் தீவுகளிலும், படைத் தளங்களை நிறுவும் திட்டங்களையும் சீனா முன்னெடுக்கிறது. அது மாத்திரமன்றி, தென்அமெரிக்க நாடான, ஆர்ஜென்டீனாவின், யுசுவாயா நகரிலும், மேற்கு ஆபிரிக்க நாடான ஈக்வடோரியல் கினியாவின் துறைமுக நகரான பாட்டாவிலும், இராணுவத் தளங்களை அமைக்கும் நடவடிக்கைகளில் சீனா ஈடுபட்டுள்ளது. இதன் மூலம், சீனாவினால் அத்திலாந்திக் மற்றும் பசுபிக் சமுத்திரங்களுக்கிடையிலான கப்பல் போக்குவரத்து வழிகளை ,லகுவாக கண்காணிக்க முடியும். தென்னாபிரிக்காவில் சீனாவின் விண்வெளி மற்றும் ஏவுகணை வழித்தடக் கப்பல் தரித்திருந்ததும் முக்கியமாக குறிப்பிட வேண்டிய விடயம்.

சீனாவின் இந்த நடவடிக்கைகள் அமெரிக்காவுக்கு கடும் சவாலை ஏற்படுத்தக் கூடியவையாகும். இது வரை தஜிகிஸ்தான், கம்போடியா, ஜிபுட்டி, சொலமன் தீவுகள் ஆகியவற்றில் சீனா தனது இராணுவ நிலைகளை அமைத்திருக்கிறது. பாகிஸ்தான், இலங்கை, கென்யா, நைஜீரியா, மாலைதீவு, சாட், மெக்சிகோ, மியான்மார் ஆகிய நாடுகளிலும் சீனா தளங்களை அமைக்கலாம் என்ற ஊகங்கள் உள்ளன. இந்த நாடுகளில் பெரும்பாலானவை சீனாவிடம், பெருமளவில் கடன்களைப் பெற்றுள்ளன. அவற்றைத் திருப்பிச் செலுத்தும் திறனை அதிகம் கொண்டிராதவை.

அதேவேளை சீனா 13 நாடுகளில் தனது கடல் கடந்த தளங்களை அமைக்கத் திட்டமிட்டுள்ளதாக, அமெரிக்காவின் பொரின் பொலிசி (Foreign Policy) என்ற சஞ்சிகை தகவல் வெளியிட்டிருந்தது. இவ்வாறான நிலையில், சீனா தனது கடற்படையை வேகமாகப் பலப்படுத்தி வருவது, அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளுக்கு கலக்கத்தை ஏற்படுத் தியிருக்கிறது. கடந்த 10 ஆண்டுகளில் சீனா, 148 போர்க் கப்பல்கள் மற்றும் நீர்மூழ்கிகளை சேவையில் இணைத்துள்ளதாக கூறுகிறார் இந்தியக் கடற்படைத் தளபதி அட்மிரல் ஹரிகுமார்.

சில ஆண்டுகளுக்கு முன்னர் வரையில் சீனாவிடம், ஒரு விமானம் தாங்கி கப்பல் கூட இருக்கவில்லை. இப்போது மூன்றாவது, விமானம் தாங்கி கப்பலை கட்டிக் கொண்டிருக்கிறது சீனா. கடந்த மாத இறுதியில் இந்தியக் கடற்படைத் தளபதி, அட்மிரல் ஹரிகுமார், கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றிய போது, ,

இந்தியப் பெருங்கடலில் நடமாடும், சீனாவின் ஆய்வுக் கப்பல்கள் பெரும் சவாலாக இருப்பதாக கூறியிருந்தார். சர்வதேச கடற்பரப்பில் சீனாவின் ஆய்வுக் கப்பல்கள் தொடர்ச்சியாக காணப்படுவதாகவும் அவற்றினால் இலத்திரனியல் சமிக்ஞைகளை பின்தொடரவும், சேகரிக்கவும் முடியும் என்றும் இந்தியக் கடற்படைத் தளபதி

**கட்டுரையாளர்**
**தமிழகத்தில் இருந்து**
**கேணல் ஹரிகரன்**




குறிப்பிட்டிருக்கிறார்.


இந்தியாவின் தேசிய பாதுகாப்பு நலன்களை அண்டி சீன ஆய்வுக் கப்பல்கள் நடமாடுவது பெரும் சவாலாக உள்ளது என்று குறிப்பிட்டிருக்கின்ற இந்தியக் கடற் படைத் தளபதி, எந்த நேரத்திலும் 4 தொடக்கம் 6 வரையான சீன ஆய்வுக் கப்பல்கள் இந்தியப் பெருங்கடலில் காணப்படுவதாகவும் கூறியிருக்கிறார். சீனாவின் மீன்பிடிக் கலங்கள் குறித்தும் அவர் சந்தேகம் வெளியிட்டுள்ளதுடன், இந்த அச்சுறுத்தலை எதிர் கொள்வதற்காக ,ந்தியா உன்னிப்பாக கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவித்திருக்கிறார். அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு யுவான் வாங் கப்பல் வந்ததையும் நினைவுபடுத்தியிருந்தார். சீனாவின் அவர் இந்தியக் கடற்படைத் தளபதி இந்த எச்சரிக்கையை விடுத்த இரண்டு நாட்களின் பின்னர் தான், கொழும்பு துறைமுகத்தில் (22ம் பக்கம் பார்க்க)




# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! முடங்கிக் கிடந்த காரியங்கள் அனைத்தும் வேகம் பிடிக்கும். நெருக்கடியான நேரத்தில் உறவினர்கள், நண்பர்கள் கை கொடுப்பார்கள். மனதில் இருந்து வந்த சஞ்சல நிலை மாறும். தருமசிந்தனை உண்டாகும். தொழில் வியாபாரம் சீராக நடக்கும். பழைய பாக்கிகள் வசூல் செய்வதில் வேகம் இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கலாம்.



ரிஷபராசி அன்பர்களே! எந்த ஒரு காரியத்திலும் சரியான முடிவுக்கு வர முடியாமல் இருந்த தடுமாற்றம் நீங்கும். சாமர்த்தியமாக எதையும் சமாளிக்கும் துணிச்சல் வரும். பணவரத்து திருப்தி தரும். எதிர்ப்புகள் குறையும். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் குறையும். எந்த வேலையை முதலில் கவனிப்பது என்று குழப்பம் வரும். மேலிடத்துடன் இருந்து வந்த கருத்து மோதல்கள் நீங்கும்.




மிதுனராசி அன்பர்களே! மறைமுக எதிர்ப்புகள் நீங்கும். எந்த ஒரு காரியமும் சாதகமாக முடியும். விருப்பமானவர்களுடன் சந்திப்பு ஏற்படும். வாக்கு வன்மையால் நன்மையை தரும். நோய் நீங்கி உடல் ஆரோக்கியம் உண்டாகும். தொழில் வியாபாரம் திட்டமிட்டபடி சிறப்பாக நடக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு வேலைப் பளு, வீண் அலைச்சல் குறையும். அதிகாரம் அந்தஸ்து கிடைக்கும்.




கடகராசி அன்பர்களே! வீண் வாக்குவாதம் ஏற்படும். மற்றவர்களிடம் அனுசரித்து செல்வது நன்மை தரும். பயணம் மூலம் சாதகமான பலன் கிடைக்கும். கடித போக்குவரத்து நன்மை தரும். பழைய வீட்டை புதுப்பிப்பதற்கு வாய்ப்புகள் ஏற்படும். தொழில் வியாபாரம் தொடர்பான நெருக்கடிகளை சந்திக்க வேண்டி வரும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் சுமையாக வரும். சாமர்த்தியமாக பழகி அனுகூலம் அடைவீர்கள்.



சிம்மராசி அன்பர்களே! தடைப்பட்டிருந்த பணவரத்து வந்து சேரும். உடல் ஆரோக்கியம் சீராகும். அடுத்தவர் விவகாரங்களில் தலையிடாமல் ஒதுங்கி செல்வது நல்லது. தொழில் வியாபாரத்தில் இருப்பவர்கள் கூடுதல் செலவை சந்திக்க நேரிடும். தேவையான உதவி கிடைக்கும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு கூடுதல் பணி காரணமாக உடல் சோர்வு உண்டாகலாம்.



கன்னிராசி அன்பர்களே! பொறுப்புகள் அதிகரிக்கும். வீட்டை விட்டு வெளியே தங்க நேரிடும். தேவையில்லாத வீண் செலவுகள் உண்டாகும். பணவரத்து அதிகரிக்கும். தொழில் வியாபாரம் தொடர்பாக அலைய வேண்டி இருந்தாலும் முடிவில் லாபம் கிடைக்கும். புதிய ஆர்டர்கள் வரும். உத்யோகத்தில் இருப்பவர்கள் உழைப்புக்கு ஏற்ற பலனை அடைவார்கள். புதிய வேலை தேடுபவர்களுக்கு நல்ல வேலை கிடைக்கும்.




துலாம் ராசி அன்பர்களே! தைரியமாக எந்த காரியத்தையும் செய்து முடிப்பீர்கள். சகோதரர்கள் மூலம் நன்மை உண்டாகும். பணவரத்து எதிர்பார்த்தபடி இருக்கும். வாகனங்களை ஓட்டிசெல்லும் போது கவனம் தேவை. வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். எந்த காரியத்திலும் விட்டு கொடுத்துச் செல்வது நல்லது. தொழில், வியாபாரம் தொடர்பான விவகாரங்களில் தாமதம் ஏற்படலாம். உத்யோகத்தில் இருப்பவர்கள் இடமாற்றம், பதவி இறக்கம் ஆகியவற்றை சந்திக்க வேண்டி இருக்கும்.




விருச்சிகராசி அன்பர்களே! ஆக்கபூர்வமான யோசனைகள் தோன்றும். மற்றவர்களுடன் கருத்து வேற்றுமை ஏற்படாமல் கவனமாக இருப்பது நல்லது. தொழில் வியாபாரம் நிதானமாக நடக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் வேலையில் கவனமாக இருப்பது நல்லது. வேறு வேலைக்கு முயற்சி செய்பவர்கள் சிறிது காலம் தள்ளிப் போடுவது சிறந்தது. குடும்பத்தில் ஏதாவது பிரச்சனை தலைதூக்கலாம். எல்லோரையும் அனுசரித்து செல்வது நன்மை தரும்.







தனுசுராசி அன்பர்களே! எந்த காரியத்தையும் செய்து முடிப்பதில் தாமதம் ஏற்படும். பகைவர்களால் ஏற்படும் சிறு தொல்லைகளை சமாளிக்க வேண்டி இருக்கும். புதிய நண்பர்களுடன் பழகும் போது கவனம் தேவை. தொழில் வியாபாரம் நிதானமாக நடக்கும். கடன் விவகாரங்கள் கட்டுக்குள் இருக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் வீண் அலைச்சலை சந்திக்க வேண்டி இருக்கும். அலுவலக பணிகள் மூலம் பதற்றம் உண்டாகும்.



மகரராசி அன்பர்களே! வீண் செலவுகள் ஏற்படும்.எடுத்த காரியத்தை செய்து முடிப்பதில் தாமதம் ஏற்படும். கொடுத்த வாக்கை காப்பாற்ற பாடுபட வேண்டி இருக்கும். மற்றவர்களின் பிரச்சனைகளுக்கு வலிய சென்று உதவிகள் செய்வதை தவிர்ப்பது நல்லது. தொழில் வியாபாரம் முன்னேற்றம் காண மிகவும் கடுமையாக உழைக்க வேண்டி இருக்கும். பார்ட்னர்களுடன் அனுசரித்து செல்வது நல்லது.



கும்பராசி அன்பர்களே! அதிகம் உழைக்க வேண்டியது அவசியம். தேவையற்ற பயணங்கள் அதன் மூலம் அலைச்சல், உடல் நல சோர்வு ஏற்படலாம். அடுத்தவரை நம்பி எதையும் ஒப்படைப்பதை தவிர்ப்பது நல்லது. சுபசெலவுகள் ஏற்படும். தொழில் வியாபாரம் திட்டமிட்டபடி நடக்கும். பொருட்களை வாடிக்கையாளர்களுக்கு அனுப்புவதில் தாமதம் ஏற்படலாம். போட்டிகள் தலைதூக்கும்.



மீனராசி அன்பர்களே! நிலுவையில் இருந்த பணம் வந்து சேரும். நீண்ட நாட்களாக திட்டமிட்ட வாகனம் சொத்து மற்றும் வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். பயணங்கள் சாதகமான பலன் தருவதாக இருக்கும். உடல் ஆரோக்யம் மேம்படும். தெய்வ பக்தி அதிகரிக்கும். தொழில் வியாபாரம் சிறப்பாக நடக்கும். பழைய பாக்கிகள் வசூ லாகும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மன மகிழ்ச்சியடைவார்கள்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# சர்வதேச சந்தையில் யாழ்ப்பாணக் கதலி!

(20ம் பக்கத் தொடர்ச்சி) எங்களுடைய யாழ்ப்பாணத்துக்கே உரித்தான கதலி வாழைப்பழம் இப்போது ஏற்றுமதிப் பொருளாக மாறியிருக்கின்றது. விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் மூலமாக இதனைச் செயற்படுத்தியிருக்கின்றார்கள். இந்தத் திட்டம் முன்மொழியப்பட்ட காலப்பகுதியில் நான் விவசாய அமைச்சின் செயலாளராக இருந்தேன். எங்களுடைய நீண்டகால எதிர்பார்ப்பு ஒன்று இதன் மூலமாக நிறைவேறியிருக்கின்றது என்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்று.

எங்களுடைய யாழ்ப்பாண வாழைப்பழ உற்பத்தியாளர்களின் கதலி வாழைப்பழங்கள் இப்போது உலக சந்தைக்குச் செல்கின்றது. இது மட்டுமன்றி இது போன்ற வேறு சிலவற்றையும் இந்தத் திட்டத்தின் கீழ் செயற்படுத்துவதற்கு திட்டமிட்டிருக்கின்றோம். அதற்கான பல முன்மொழிவுகள் முன் வைக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, இங்குள்ள எங்களுடைய பழச் செய்கையை மேம்படுத்துவது, பழச்சாறு உற்பத்தி போன்ற பலவற்றை ஊக்குவித்து அவற்றை வெளிநாட்டுச் சந்தைக்கு ஏற்றுமதி செய்வதற்கான செயற்திட்டங்களை முன்மொழிந்துள்ளோம். எங்களுடைய விவசாயிகள் இதன் மூலமாக நன்மையடைய முடியும்.

இந்தத் திட்டம் இலங்கையில் இப்போது இரண்டு இடங்களில் செயற்படுத்தப்படுகின்றது. ஒன்று - இராஜாங்கனையில். இரண்டாவதாக இப்போது யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டிருப்பது. யாழ்ப்பாணத்தில் செயற்படுத்தப்படும் திட்டத்தின் விஷேட அம்சம் என்னவென்றால், இந்த உற்பத்திகள் அனைத்தும் நூறு வீதம் இயற்கை விவசாயத்தின் மூலமாக விளைவிக்கப்படுகின்றது என்பது தான். அதனால் அதற்கு நிறைவான ஒரு சந்தைவாய்ப்பு ஏற்படும் என்று நான் நம்புகின்றேன். இவ்வாறு யாழ்ப்பாண அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

இதன் மூலமாக எமது விவசாயிகள் அதிகளவுக்கு வருமானத்தைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்பு ஏற்படுகின்றது. அண்மைக்காலம் வரையில் வாழைச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் போதிய வருமானத்தைப் பெற்றுக் கொள்ள முடியாத ஒரு நிலை இருந்தது. கதலி வாழை கிலோ100 ரூபாவுக்குள்தான் விற்பனையாகியது. உற்பத்தியாளர்கள் கடைகளுக்கு கொடுக்கும் போது அதனையும் விட குறைந்த விலைக்குத்தான் கொடுத்தார்கள். இதனால் போதிய வருமானத்தை வருமானத்தை அவர்களால் பெற முடியவில்லை.

இப்போது வருமானம் உறுதிப்படுத்தப்படுவதால், இந்த முயற்சியில் மேலும் பலர் இறங்குவதற்கான வாய்ப்புள்ளது. இது வேலைவாய்ப்பை அதிகரிக்கும் அந்நியச் செலாவணி வருமானமும் இதன்மூலமாக அதிகரிக்கும். பதப்படுத்தல் - பொதியிடல் ஏற்றுமதிச் செற்பாடு என்பதற்றின் மூலம் மேலும் ஒரு தொகுதி மக்களுக்கு வேலை வாய்ப்பும் கிடைக்கின்றது. இந்த அனுபவம் யாழ்ப்பாண மக்களுக்கு புதிதானதாக இருந்தாலும், மேலும் விடயங்களில் இந்த அனுபவம் அவர்களுக்கு உதவலாம்.

ஏற்கனவே சீனாவிலிருந்தும் வாழைப்பழத்துக்கான கேள்வி இருந்தது. இராஜாங்கனையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. கடந்த நவம்பர் மாதத்திலிருந்து டுபாய்க்கும் இராஜாங்கனையிலிருந்து வாழைப்பழம் ஏற்றுமதி செய்யப்படுகின்றது

இப்போது யாழ்ப்பாணத்திலிருந்தும் ஏற்றுமதி ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. எதிர்காலத்தில் இது மேலும் அதிகரிக்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. எமது விவசாயிகள் இதனை எவ்வாறு பயன்படுத்தப்போகின்றார்கள் என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

# பதினாலாவது மே பதினெட்டு

(15ம் பக்கத் தொடர்ச்சி) (event oriented). அவை ஒரு தேச நிர்மாணத்துக்குரிய கட்டியெழுப்பும் (proactive) அரசியல் அல்ல.ஒரு தேசத்தைக் கட்டியெழுப்பும் அரசியலில் தான் நினைவு கூர்தல், அதற்குரிய மகிமையோடும் அரசியல் அடர்த்தியோடும் அனுஷ்டிக்கப்படும். அதற்குரிய பல்வகைமையோடு அனுஷ்டிக்கப்படும். இல்லையென்றால் கட்சிகளாக பிரிந்திருக்கும் மக்கள் நினைவுகூர்தலை அதற்குரிய பெறுமதியுணர்ந்து அனுஷ்டிக்கப் போவதில்லை. மாறாக, அது ஒரு துக்க நிகழ்வாக,அல்லது செயலுக்குப் போகாத பிரகடனங்களை வாசிக்கும் ஒரு நிகழ்வாக,ஒரு சடங்காகச் சுருங்கிப் போய்விடும்.

இம்முறை,பல்கலைக்கழக மாணவர்கள் சமூகப்பங்களிப்போடு கஞ்சி காய்ச்சுவது ஒரு நல்ல முன்னுதாரணம். அதேசமயம் கட்சிகளுக்கு எதிராக கருத்துக்களைக் கூறாமல் விட்டால் அதுவும் ஒரு நல்ல முன்னுதாரணம். முள்ளிவாய்க்காலில் தாமாகத் திரளக்கூடிய மக்களை, கட்சிகளும் பொதுக்கட்டமைப்புகளும் மாணவர்களும் பிரிக்காமல் விட்டாலே போதும். இறந்தவர்களின் ஆத்மா இந்த ஒரு விடயத்திலாவது சாந்தி அடையும். ஏனெனில் மனநல மருத்துவ நிபுணர் சிவதாஸ் கூறுவதுபோல நினைவுகூர்தல் எனப்படுவது காயங்களைக் குணப்படுத்துவது. காயங்களைக் கிளறுவது அல்ல.

# நீதி கோரும் தமிழ் அரசியலின் தோல்வி?

(17ம் பக்கத் தொடர்ச்சி) உண்மையில் இந்த விடயம் தொடர்ந்தும் சிறிலங்கா ஆட்சியாளர்களுக்கே சாதகமாக இருக்கின்றது. இப்போதும் தாங்கள் பயங்கரவாத்தினால் பாதிக்கப்பட்ட நாடென்னும் ஒரு பிரச்சாரத்தோடுதான், சிங்கள ஆளும் வர்க்கம் உலகத்தை எதிர்கொள்ளுகின்றது. இதனை புரிந்துகொள்ளாமல் நாம் முன்னெடுக்கும் விடயங்கள் எங்களுக்கு எதிர்மறையான விளைவுகளையே ஏற்படுத்தும். வேண்டுமானால் விசுவாசத்தை மனதில் வைத்துக் கொள்வோம், ஆனால் நமது நாவில் தந்திரம் மட்டுமே இருக்க வேண்டும். தந்திர அரசியலுக்கு விசுவாசம் இல்லை.

# பதற்றத்தை அதிகரிக்கும் சீனா

21ம் பக்கத் தொடர்ச்சி) விநியோக கேந்திரத்தை அமைக்கும் திட்டத்தை அறிவித்திருக்கிறது, சைனா மேர்ச்சன்ட் குழுமம். இந்தியாவும் ,லங்கையும் நெருங்கிய நட்புக் கொண்ட அண்டை நாடுகளாக இருந்தாலும், சீனா விடயத்தில் இரண்டுக்கும் இடையில் ஒருமித்த கருத்துக் கிடையாது. சீனாவை இலங்கை, முதலீட்டாளராக பார்க்கிறது. இந்தியா பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான சக்தியாக நோக்குகிறது. இந்த நிலையில், இரண்டு ஆதிக்க சக்திகளுக்கும் இடையில் இலங்கை திண்டாடுவது தவிர்க்க முடியாத ஒன்றாகவே இருக்கிறது.

முல்லைத்தீவு புனிதபூமி அன்பு இல்லத்தின்
423 குழந்தைகளின் வாழ்வுக்காகவும் கல்வி மேம்பாட்டிற்காகவும்
உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை நடாத்தும் 12வது ஆண்டு
இன்னிசை மாலையும் இராப்போசன விருந்தும் 28 ஒக்டோபர் 2023 சனிக்கிழமை

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

## Family Law
- Divorce
- Custody & Support

## Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

## Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

## Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

## Sasitharan Law Professional Corporation
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.


## *At Need Funeral Arrangements*
We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com

மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்

வீடு வாங்க.. விற்க..

Ravi. Paramu
Broker



Cell: 416-262-4176
Bus: 416-298-3200

HomeLife Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto - ON., M1P 4S6

RANJANI THIRUKESWARAN LAW OFFICE

- Real Estate: வீடு, காணி கொள்வனவு விற்பனைச் சட்டம்
- Business Law: வியாபார, வர்த்தகச் சட்டம்
- Immigration Law: குடிவரவு, அகதிச் சட்டம்
- Family Law: குடும்ப வழக்குகள்
- Last Wills: உயில் தயாரித்தல்
- Power of Attorney: தத்துவப் பத்திரம் தயாரித்தல்

2855 Markham Road Suite 209
Toronto -ON- M1X 0C3
(Markham / McNicoll )
416 291 2242



Ranjani Thirukeswaran
(Barrister & Solicitor)

TAX CENTRIC



Gayatiri Thavan
Tel: 289.569.0169 • Fax: 289.569.0167
Email: taxcentric@outlook.com
www.taxcentric.ca
2338 HURONTARIO ST., UNIT 100A, MISSISSAUGA, ON L5B 1N1

உங்கள் கணக்கியல் வருமானவரி சம்பந்தமான தேவைகளுக்கு அனுபவமுள்ள எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்

Tel: 289.569.0169

Servicing Clients from Mississauga, Brampton, Hamilton, St. Catharines, Niagara, Kitchener, Cambridge and Guelph

- Personal Tax
- Corporate Tax
- Book Keeping & Accounting
- Payroll Services
- GST/HST Filing
- Corporate Services
- Business Startup
- Financial Planning



OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
HOMELIFE
ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage*





RENOWNED FOR
AUTHENTIC KANCHIPURAM
SILK SAREES

$599* FLAT RATE

Aalayaa

2 VILLA ADA DRIVE,
MARKHAM, ON L6B 1N7
1.855.575.0500

உங்களிடம் ..
திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய கடன் இருக்கிறதா?
வணிக உரிமையாளர்களுக்கும் சுயதொழில் செய்வோருக்கும் மகிழ்ச்சியான செய்தி!
உங்கள் வருமான மதிப்பீடுகள் இல்லாமல் மாதந்தோறும் $5000 வரை அங்கவீனக் காப்பீட்டுத் தொகையைப் பெற முடியும்.



விபரங்களுக்கு அழையுங்கள்
அஜித் சபாரட்ணம்
647-401-5800
416-439-2800

10 Thornmount Dr, Scarborough, ON M1B 3J4.

